
# முள்ளிவாய்க்கால் : தீயுண்டநிலம்



“எவ்வளவு உப்பை வேண்டுமானாலும் நீங்கள் தண்ணீரில் கரைக்கலாம், ஆனால் அது கடலை உருவாக்கிவிடாது”

என்று பாடுகிறார் பதினான்காம் நூற்றாண்டின் புகழ்பெற்ற காஷ்மீர்க் கவிஞன் லால் தெத். தீயுண்ட நிலமாக இப்போது விரிந்துகிடக்கும் நந்திக்கடலோரம், முள்ளிவாய்க்கால், வலைஞர்மடம், இரணைப்பாலை போன்ற இடங்களில் நடந்தேறிய இன அழிப்பைப் பற்றி எத்தனை பொய்களையும் மறுப்புக்களையும் மாய்மாலங்களையும் இலங்கை அரசும் அதனுடைய உள்ளூர் - வெளியூர் நேச சக்திகளும் முன்வைக்க முயன்றாலும் அந்த இனப்படுகொலையின் பயங்கரமும் அவலமும் மெல்ல மெல்ல வெளியே வரத் தொடங்கிவிட்டன. எவ்வளவுதான் நீரை ஊற்றினாலும் குருதிக் கடலின் நிறத்தை மாற்றமுடியவில்லை.

இன அழிப்பின் பிற்பாடு அதனை நினைந்தழுவது தவிர்க்க முடியாதது. கூடவே, அவ்விழப்பின் நினைவுகளை ஆழமாக நினைவெழுதுதலாகச் செதுக்கி வைப்பதும் ஈழத் தமிழ்ச் சமூகத்தின் பெருங்கடப்பாடாகும். இத்தகைய நினைவெழுதல்களும் அவற்றின் உயிர்ச் சாட்சியங்களும்தான் இன அழிப்பின் நிகழ்வுகளையும், நினைவுகளையும் திட்டமிட்டு அழிக்க முனையும் அரசுக்கும் அதனுடைய பலதரப்பட்ட படைப்பிரிவுகளுக்கும் அறம்சார்ந்த எதிர்ப்புக் குரல்களாக உரக்க ஒலிப்பவை. இன்றைய சூழலில் நமது நினைவுகள் அழிதலும் அழிக்கப்படுதலும் என்பது எமது இருப்பும் வாழ்வும் அடையாளங்களும் அழிக்கப்படுவதற்கு ஒப்பானதாகும்.

நினைவழித்தலுக்கு எதிராக ஒரு சிறிய எதிர்ப்புக் குரலாக ‘முள்ளிவாய்க்கால்: தீயுண்ட நிலம்’ எனும் இந்தச் சிறப்பிதழ் அமைகிறது.

# முள்ளிவாய்க்கால் தீயுண்டநிலம்

சிங்களக் கவிஞரும் ஊடகரும் இலங்கையில் ஜனநாயகத்துக்கான பத்திரிகையாளர்கள் அமைப்பின் (Journalists for Democracy in Sri Lanka-JDS) முக்கியமான செயற்பாட்டாளருமான பாஷன அபேவர்த்தன எங்களுக்கு அளித்த நேர்முகத்தில் குறிப்பிடுகிற ஒரு விடயம் நமது தீவிர கவனத்தைக் கோருகிறது.

"முள்ளிவாய்க்கால் இன அழிப்புக்குப் பிற்பாடு, சிங்களர்களின் கூட்டு அடையாளம் (Collective Identity), தமிழ் மக்களது இன அழிப்பை மறைப்பதிலும் மறுப்பதிலும்தான் தங்கியுள்ளது" என்று அவர் கூறுகிறார். "இப்படிச் செய்வதன் மூலம் இன அழிப்பைப் புரிந்த இலங்கை அரசுக்குத் தார்மீக அடிமைகளாக" மிகப் பெரும்பாலான சிங்களவர்கள் மாறிவிட்டனர் என்று பெரும் மனத் துயர் அடைகிறார் பாஷன.



இன்னொரு தளத்தில் முள்ளிவாய்க்கால் இன அழிப்பு என்பது, தமிழ் மக்கள் எங்கெங்கு வாழ்ந்தாலும் அவர்களின் கூட்டு அடையாளத்தின் பிரிக்க முடியாத வலிமிகுந்த கூறாக மாறிவிட்டது. தமிழகப் பேராசிரியரும் இலக்கிய விமர்சகருமான தமிழவன் எழுதுவது போல, கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் அதிகமான காலத் தமிழர் வரலாற்றில் இத்தகைய பேரழிவைத் தமிழ் மக்கள் சந்திப்பது இதுவே முதல்முறை. எனவே, இந்த அழிவின் நினைவெழுதலையும் நினைந்தழுதலையும் அவ்வளவு எளிதாக எவரும் கடந்து சென்றுவிட முடியாது.

சனல் 4 தொலைக்காட்சியின் 'இலங்கையின் கொலைக் களங்கள்' ஆவணப் படத்தின் இரண்டு பாகங்கள் ஒளிபரப்பப்பட்டபோது அவை ஏற்படுத்திய தாக்கத்தை நாம் அறிவோம். இந்த நூற்றாண்டின் முதலாவது இன அழிப்புப் பற்றிய அந்த ஆவணப் படங்கள் ஈழத் தமிழரின் பேரவலங்கள் மீது உலகின் கவனத்தைத் திருப்பப் பெருந்துணையாக இருந்தனவென்பது இன்று பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்று. லண்டனில் மையங் கொண்டிருக்கும் தமிழ் இணையத்தளம் ஒன்று சனல்-4 தொலைக்காட்சிக்கு நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் என்று பரிந்துரைப் பிரசாரத்திலும் பங்கெடுத்திருந்தது. ஆனால், பாஷன அபேவர்த்தனவும் அவரது சிங்கள எழுத்தாளர்/ கவிஞர்/ ஊடகத் தோழர்களான சனத் பாலசூரிய, பொட்டால ஜயந்த, அஜித் ஹேரத், மஞ்சுள வெடிவர்த்தன, அதுல விதானகே, இந்திக்க கமகே, கித்சிறீ போன்றவர்களின் தீவிர முயற்சியால் தான் இனப்படுகொலை தொடர்பான கைத் தொலைபேசி வீடியோப் படங்களும், தமிழ் இளைஞர்கள் கண்களும் கைகளும் கட்டப்பட்டுச் சுட்டுக் கொல்லப்படுகிற படுகொலைக் காட்சிகளும் சனல்-4 தொலைக் காட்சியைச் சென்றடைந்தன. பாஷன இந்தச் சிறப்பிதழின் நேர்முகத்தில் சொல்வதுபோல, "தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பை அம்பலப்படுத்துவதும் அவ்வழிப்புக்கான பொறுப்பைச் சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதும் எங்களது அறக் கடப்பாடு". அத்தகைய கடப்பாட்டின் விளைவாகத்தான் தமது உயிரையும் பணயம்வைத்து இந்தச் சிங்களத் தோழர்கள் தமிழ் மக்களது விடுதலைப் போராட்டத்துக்காக நீண்ட காலம் உழைத்து வந்தார்கள். இன்று பல்வேறு ஐரோப்பிய நாடுகளிலும் அரசியல் தஞ்சம் பெற்று வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் பலர் 'ஹிரு' என அழைக்கப்படும் சிங்கள வார இதழை நடத்தியவர்கள். 'ஹிரு' குழுவினர் என அழைக்கப்பட்ட இவர்கள் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க வேண்டுமெனத் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தவர்கள். கவிஞர் அஜித் ஹேரத் 'ஹிரு'வின் ஆசிரியராகப் பணிபுரிந்தவர். தமிழ் எழுத்தாளர்களையும் சிங்கள எழுத்தாளர்களையும் ஒன்று சேர்த்து 'மானுடத்தின் கலைக் கூடல்' ஒன்றைக் கொழும்பில் நடத்தியவர்கள் இந்த ஹிரு அமைப்பினர். சிங்களப் பேரினவாதிகளால் பலமாகத் தாக்கப்பட்டுக் காயமுற்றவர்கள்.

இவர்கள் வெளிப்படுத்துகிற, நடைமுறையில் கைக்கொள்கிற உணர்வுத் தோழமையைத் தமிழ் மக்களுக்கு உணர்த்துவதே இந்தச் சிறப்பிதழின் நோக்கங்களுள் ஒன்றாகும். நீண்டகாலக் கண்ணோட்டத்தில் தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தின் வெற்றி, தமிழர்களல்லாத பல்வேறுபட்ட மக்களிடமிருந்து எமக்கான உணர்வுத் தோழமையை (Solidarity) எவ்வாறு வளர்த்துக் கொள்கிறோம் என்பதிலும் தங்கியிருக்கிறது. அந்த வகையில் சிங்கள மக்களும் முஸ்லிம் மக்களும் மிகப் பெரும் உணர்வுத் தோழமையுடன் எம்முடன் இணையவேண்டுமானால் நாங்களும் அவர்களுக்கான புரிந்துணர்வு வெளியை ஏற்படுத்திக் கொடுக்க இடையறாது பாடுபட வேண்டியுள்ளது. இது நமது வரலாற்றுக் கடமை மட்டுமல்ல, நமது விடுதலைக்கான அடிப்படை நிபந்தனையுமாகும்.

## - சேரன் -

சுல்பிகா, இளைய அப்துல்லாஹ் ஆகியோர் இந்த இதழில் எழுதியிருக்கும் அனுபவப் பகிர்வுகளும் சிங்கள தோழர்களின் கவிதைகளும் நமது உணர்வுத் தோழமைக்கு ஊட்டம் சேர்க்கட்டும்.


அயர்லாந்திலுள்ள ட்ரினிற்றிக் கல்லூரியில் விரிவுரையாளராக இருக்கும் கலாநிதி ஜுட் லால் ∴பெர்னான்டோ சில வாரங்களுக்கு முன்பு ரொறன்ரோ வந்திருந்தார். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்திப் பல இடங்களிலும் உரையாற்றிய கலாநிதி ஜுட் குறிப்பிட்ட இரண்டு அனுபவக் குறிப்புகள் முக்கியமானவை.

1983இல் தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளை நேரில் பார்த்தமை தனக்குள் ஏற்படுத்திய பாரிய தாக்கத்தைக் குறிப்பிட்ட ஜுட் லால் ∴பெர்னாண்டோ, அத்தகைய வன்முறைக்கு எதிராகத் தனது தார்மீகப் பதிலடி, தான் தமிழ்மொழியை ஆழமாகக் கற்றுக்கொண்டமைதான் எனக் குறிப்பிட்டார். அதுபோல முள்ளிவாய்க்கால் இனப் படுகொலைகளுக்கு எதிரான தனது தார்மீக எதிர்ப்பின் ஒரு வடிவம்தான் டப்ளினில் இடம் பெற்ற 'இலங்கைக்கு எதிரான மக்கள் தீர்ப்பாயம்' (People's Tribunal on Sri Lanka) இந்தத் தீர்ப்பாயத்தின் நடவடிக்கைகளில் ஜுட் லால் ∴பெர்னாண்டோ முக்கிய பங்காற்றியிருந்தார். 2010 ஜனவரி 14 - 16 வரை டப்ளின் சிற்றிப் பல்கலைக் கழகத்தில் இடம் பெற்ற இந்தத் தீர்ப்பாயத்தில் தமிழ் மக்கள் இன அழிப்பு தொடர்பான பல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. போர்க் குற்றங்கள், மனிதத்துக்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை எல்லாமே இடம்பெற்றுள்ளன என்பதை மக்கள் தீர்ப்பாயம் உறுதி செய்துள்ளது. இந்தத் தீர்ப்பும் மக்கள் தீர்ப்பாயத்தின் நடவடிக்கைகளும் முக்கியமானவை என்பது மிகைப்படுத்தப்பட்ட கூற்று அல்ல.

இத்தகைய நிலையில் நாங்கள் எம்மை நோக்கிக் கேட்க வேண்டிய கேள்வி ஒன்றும் உள்ளது. இந்தச் சிங்கள, முஸ்லிம் தோழர்களுக்கு எமது அறம் சார்ந்த தோழமை உணர்வை நாம் எப்படி வெளிப்படுத்தப் போகிறோம்?



cheran@thaiveedu.com




Cartoon: Avantha Artigala (Daily Mirror, 2007 October)



Cartoon: K.W.Janaranjana (Ravaya 2009 January)

**பாஷன அபயவர்த்தன** - எழுத்தாளர், கவிஞர், ஊடகவியலாளர். இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாகப் பணிபுரிந்தவர். ‘ஹிரு’ (சூரியன்) என்னும் சிங்கள மாற்றுப் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் இருந்தவர். ‘ராவய’ உட்படப் பல்வேறு சிங்களப் பத்திரிகைகளுக்குத் தொடர்ந்தும் பத்தி எழுத்தாளராக இருப்பவர்.

2003ஆம் ஆண்டு கொழும்பில் தமிழ் - சிங்கள எழுத்தாளர்கள், கவிஞர்களின் ஒன்றுகூடலை ஏற்பாடு செய்தவர். இந்த ஒன்றுகூடல் சிங்களப் பேரினவாதிகளால் தாக்கப்பட்டது. பல சிங்கள எழுத்தாளர்கள் காயமுற்றனர்.

இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர்கள் (Journalists for Democracy in Sri Lanka – JDS) என்னும் அமைப்பின் முக்கிய செயற்பாட்டாளர். நாடு கடந்து, இப்போது ஐரோப்பிய நாடொன்றில் புகலிடம் பெற்றிருக்கிறார்.



## முள்ளிவாய்க்கால் தீயுண்டநிலம்
















# தமிழ் இன அழிப்புக்கு சிங்கள மக்களே பொறுப்பேற்க வேண்டும்

-பாஷன அபயவர்த்தன

**உங்களதும், இலங்கையில் ஜனநாயகத்திற்கான பத்திரிகையாளர்கள் (Journalists for Democracy in Sri Lanka- JDS) என்ற உங்களது அமைப்பினது நண்பர்களதும் பங்களிப்பு இல்லாமல் சர்வதேச சமூகத்தையே உலுக்கிய கைத்தொலைப்பேசி வீடியோவில் எடுக்கப்பட்ட படுகொலைக் காட்சிகள் வெளிச்சத்துக்கு வந்திருக்காது. இந்த வீடியோப் படங்களை சனல் 4 தொலைக் காட்சிக்குத்தான் வழங்கவேண்டும் என்று எப்படித் தீர்மானித்தீர்கள்?**

முதலில் நான் ஒன்றைக் கூறவேண்டும். இலங்கை அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட பயங்கரமான படுகொலைகளும் குற்றச் செயல்களும் இரகசியமாக நடந்தவையல்ல. சர்வதேச அதிகார சக்திகளைப் பொறுத்தவரை இவ்வாறான இன அழிப்பு நடவடிக்கை இடம்பெறப்போகின்றது என்பதை ஏற்கனவே அவர்கள் அறிந்திருந்தார்கள். இந்தப் படுகொலைக் களத்தின் ஆர்வமிக்க பார்வையாளர்களாக ஏராளமானோர் தொலைதூரத்தில் இருந்தார்கள். இந்த உண்மை, ஐ.நா. அவையின் மனிதாபிமான செயற்பாடுகளுக்கான தலைவர் சேர். ஜோன் ஹோல்ம்ஸ் சனல் 4இல் வெளிப்படையாக கூறிய ஒரு கருத்தில் மிக நன்றாகவே பிரதிபலித்தது:

“சர்வதேச சமூகத்திலிருந்து யாராவது தம்மைத் தடுத்து நிறுத்துவார்கள் என்று இலங்கை அரசு ஒருபோதும் நம்பவில்லை. அவர்களது கணிப்பு சரியானதே. ஆனால் சில இராஜ தந்திர ஆட்டங்கள் இதைச் சுற்றி நடந்தன.” ஆகவே நீண்ட காலமாக நடைபெற்ற இந்த உள்நாட்டுப் போர் இரத்தக்களரியில் முடிந்தமை வழமையான, தர்க்கரீதியான முடிவு என்பதாக நாம் பார்க்கமுடியாது. மாறாக, கள்ளத்தனமாக கணக்கிடப்பட்ட சர்வதேச அரசியல் விளையாட்டின் விளைவாகவே பார்க்கப்படவேண்டும். உலகமெங்கும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் மக்கள், பொலிசார் அடித்தபோதும் துன்புறுத்தியபோதும் இழுத்துக் கைது செய்தபோதும், அந்தந்த நாடுகளின் வீதிகளில் பல மாதங்களாக நின்றனர். ஓலமெழுப்பினர். விம்மினர். கடுங்குளிரையும் பொருட்படுத்தாது எதிர்த்து நின்றனர். பொது மக்கள் சதுக்கங்களை கைப்பற்றியிருந்தனர். விரைவு நெடுஞ்சாலைகளைத் தடைசெய்தனர். பலர் தீக்குளித்தனர். இவை எங்கள் எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. ஆனால் மைய நீரோட்ட ஊடகங்கள் இவற்றுக்கு எத்தகைய முக்கியத்துவமும் வழங்கவில்லை. இனப் படுகொலை இடம்பெறுவதைப்பற்றி உணர்வுபூர்வமான செய்திகள் எதையும் வெளியிடவில்லை.

இப்படியான ஒரு சூழ்நிலையில்தான் தமிழர்கள் படுகொலை செய்யப்படுகின்ற முதலாவது வீடியோ முக்கியத்துவம் பெறுகின்றது. இது வெளிவந்தமை அன்றைய சூழலை ஆட்டங்காண வைத்தது. இலங்கை அரசாங்கத்தைத் தவிர வேறு எவருக்கும் அந்த வீடியோவை பொய்யெனச் சொல்லிப் புறம் தள்ளிவிடுவதற்கான துணிவு இருக்கவில்லை. இலங்கை அரசாங்கம் வழமை போலவே இதனையும் மறுத்தது. இப்படி மறுப்பது என்பது அவர்களுக்கு ஒரு சடங்கு மாதிரி.

இந்த வீடியோ பிரதிகள் கிடைத்தபோது உண்மையிலேயே என்ன செய்வது என எங்களுக்குத் தெரியவில்லை. இவற்றை வெளியிடுவதற்கு சரியான பொருத்தமான ஒரு வழியைக் கண்டுபிடிக்கும்வரை இந்த வீடியோப் பிரதிகள் இரண்டு கிழமைகளாக எங்களிடமே இருந்தன. இக் காலங்களில் சனல் 4 தொலைக்காட்சியுடன் எமக்கு எந்தவிதமான உறவும் இருக்கவில்லை. ஆனால் இலங்கை இராணுவத்தால் நடாத்தப்படுகின்ற அகதிகள் முகாம்களுக்குள் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த, இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் தொடர்பான இரகசியப் புலனாய்வு அறிக்கை ஒன்றை வெளியிட முயற்சித்த சனல் 4இன் பத்திரிகையாளர் ஒருவர் நாடுகடத்தப்பட்டிருந்தார் என்பதை நாம் அறிந்திருந்தோம். ஆகவே இந்த வீடியோவைச் சர்வதே மனித உரிமைகள் குழுக்களுக்கும் ஐ.நா அங்கங்களுக்கும் அனுப்புவதோடு நின்று விடாமல் அந்தக் குறிப்பிட்ட பத்திரிகையாளரையும் தொடர்புகொள்ள முயற்சித்தோம். ஏனெனில் அப்படியான ஒருவர்தான் இந்த ஆதாரத்தின் முக்கியத்துவத்தினை புரிந்துகொள்ளக் கூடியநிலையில் இருப்பார் என்பதை உணர்ந்திருந்தோம். ஆனால் அவர் அங்கு இருக்கவில்லை. இருந்தபோதும் சனல் 4 தொலைக்காட்சியின் வெளிநாடுகளுக்கான செய்திப்பிரிவினரோடு தொடர்பு கொண்டு இதன் பின்னணியை விளங்கப்படுத்தினோம். இவ்வாறுதான் சனல் 4 தொலைக்காட்சியுடனான உறவுக்கு இறுதியாக வந்தடைந்தோம்.

**நீங்கள் இலங்கையின் ஜனநாயகத்திற்கான பத்திரிகையாளர்கள் அமைப்பின் முக்கியமான ஓர் அங்கத்தவர். இந்த அமைப்பு எப்படி உருவானது என்பதைப்பற்றி எங்களுக்கு கூறுவீர்களா?**

இப்பொழுது தலைமறைவாக வாழ்கின்ற பல பத்திரிகையாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் ஆகியோரின் கூட்டு முயற்சி ஒன்றே இந்த அமைப்பின் உருவாக்கமாகும். இதன் முதலாவது கூட்டம் 2009ம் ஆண்டு ஜூலை மாதம் பேர்லின் நகரில் நடைபெற்றது. இதில் பதினைந்து தமிழ், சிங்களப் பத்திரிகையாளர்களும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர். நீண்ட நேர அலுப்பான விவாதங்கள் நம்மை ஒரு முடிவுக்குக் கொண்டுவந்து நிறுத்தியது. நாம் கூட்டான குழுவொன்றை உருவாக்குவதற்கான தேவையையும் முக்கியத்துவத்தையும் நாம் உணர்வதற்கு இந்த விவாதங்கள் நம்மை நிர்ப்பந்தித்தன. அதாவது, நாம் தனித்தனியாகச் செய்கின்ற வேலைகளைக் குழுவொன்றினுடாக ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் செயற்படுத்துவதற்குப் பயன்படுத்தலாம் என்பதையும் உணர்ந்தோம். ஆனால் பிற்காலங்களில் நாம் முன்னெடுத்த செயற்பாடுகள் நமது குழுவின் ஆரம்ப நோக்கங்களை மேலும் தீவிரமாக மாற்றின. ஏனெனில் நாம் குறிப்பிடத்தக்க சர்ச்சைக்

குரிய சவாலான விடயங்களைக் கையில் எடுக்கவும் அவற்றுக்கு முகங்கொடுக்கவும் வேண்டியிருந்தது. கடந்த மூன்று வருடங்கள் மிகவும் சவாலான காலம். ஆனால் நாங்கள் அதையெல்லாம் கடந்து வந்தோம். ஆனால் எமது அமைப்பு தனித்திருக்கின்ற மனிதர்கள் கூடாரமாகவோ அல்லது சமூகநல நிறுவனமாகவோ உருவாவதிலோ மாறுவதிலோ ஒருவருக்கும் விருப்பமிருக்கவில்லை. இவையெல்லாம் நம்மை மேலும் இறுக்கமாக ஒன்றிணைய வைத்தது.

**மே 2009ல் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பான உங்களது எதிர்வினை என்ன என எங்களுக்குக் கூறுவீர்களா? அப்பொழுது நீங்கள் எங்கே இருந்தீர்கள்?**

இப்பொழுதுபோலவே போரின் கடைசிக் காலங்களில் நான் தலைமறைவாகவே இருந்தேன். இதனால் 2006ம் ஆண்டு மார்கழி மாதம் நாட்டைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டேன். நான் நாட்டைவிட்டு மிகத் தூரத்தில் வாழ்ந்தபோதும், இலங்கைக்குள் ஊடக வேலை செய்கின்ற எனது சக நண்பர்கள் பலரைவிட, குறிப்பிட்ட சூழ்நிலை மற்றும் சம்பவங்கள் தொடர்பாக பல தகவல்களை நன்றாகப் பெற்றுக் கொள்கின்ற ஒரு நிலையிலேயே எப்பொழுதும் இருக்கின்றேன். இக் காரணத்திற்கான பின்னணி, மற்றவர்களைவிட எனக்கு அக்கறை அதிகம் என்பதல்ல. மாறாக இலங்கையில் இருக்கின்ற பல்வேறு தடைகள் காரணமாக அங்கு செயற்படுகின்ற ஊடகவியலாளர்களுக்கு இல்லாத ஒரு சலுகை எனக்கு இருக்கின்றது. அதாவது அனைத்து மூலாதார சக்திகளுடனும் தொடர்பு கொண்டு எல்லா வகையான தகவல்களையும் எந்தத் தடைகளும் இல்லாது பெற்றுக்கொள்வதற்கான வழிகள் எனக்கு இருக்கின்றன. இந்த ஒரு உண்மைதான், தலைமறைவாக இருந்தபோதும், நான் எழுதுவதைப் பிரசுரிக்கப் பத்திரிகைகள் இருக்கின்றமையாலும் எனது பத்திரிகையாளர் தொழிலை தொடரக் கூடியதாக உள்ளது.

எனது தலைமறைவு வாழ்க்கையின் முதல் மூன்று வருடங்களும் நான் தொடர்ச்சியாக ஒன்றிரண்டு சிங்களப் பத்திரிகைகளுக்குப் பத்திகளும் ஆய்வுக் கட்டுரைகளும் எழுதி வந்துள்ளேன். என்னைப் போன்றவர்களின் குரல்களும் வெளிவருவதற்கான ஓரளவான ஜனநாயக வெளியை வைத்திருப்பதற்கு இந்தப் பத்திரிகைகள் முயற்சிக்கின்றன. இவற்றில் ஒவ்வொரு கிழமையும் வன்னியில் என்ன நடக்கின்றது என்பதையும் அந்த அழிவுகளையும் கொடூரங்களையும் எழுதினேன். இது வெறுமனே தமிழ் மக்களை என்ன செய்கின்றார்கள் என்பதை வெளியிடுகின்ற கட்டுரைகளல்ல. மாறாக எனது மக்களின் தார்மீக அறத்தை உயிர் வாழவைப்பதற்கான அவாவினாலான ஒரு போராட்டமே. இந்த இடத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

தென் பகுதியில் நடைபெற்ற தொடர்ச்சியான முடிவற்ற வன்முறை காலச் சூழல்களில் வளர்ந்த தலைமுறையைச் சேர்ந்தவன் நான். பயங்கரமான காலங்களினூடாக வாழ்ந்திருக்கின்றேன். மிகவும் அகோரமான காட்டுமிராண்டித்தனமான சம்பவங்களின் சாட்சியாக நான் இருக்கின்றேன். ஆனால் 2009 விதிவிலக்கானது. என்னுடைய வாழ்க்கையில் மிகவும் நிம்மதியிழந்து மனச் சோர்வடைந்து வாழ்ந்த காலங்கள் அவை. அப்பொழுது மனிதர்களுக்கு நடந்த பயங்கரமான துன்பங்களும் சோகங்களும் அழிவுகளின் அளவுகளும் கணக்கிடவோ கற்பனை செய்யவோ முடியாதவை. இந்தப் பேரழிவுகளினதும் இன அழிப்பினதும் 'தினசரிச் செய்திகள்' உள்வாங்கவோ கூறவோ முடியாதளவிற்கு மோசமானவையாக இருந்தன. ஆனால் இவற்றைப் பற்றிய தெற்கில் இருந்த அறியாமைக்கும் அவற்றைப் புரிந்து கொள்ள முடியாதளவிற்கு உணர்வில்லாதவர்களாக இருந்தமைக்கும் சாட்சியாக இருந்தமை என்னை மிகவும் பாதித்தது. மிலேச்சத்தனமான வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களாக நீங்கள் இருக்கும் பொழுது குறிப்பிடத்தக்களவு தார்மீக அறத்தை உணரக்கூடியவர்களாக நீங்கள் இருப்பீர்கள். ஏனெனில் உங்களுக்குத் தெரியும் என்ன நடத்திருக்கும் என. நீங்கள் எந்தவிதமான மனப் பாதிப்பில் இருந்தபோதும், அழிவானது உடல் ரீதியாக இருப்பின் உங்களது விதியை நீங்களே காணக்கூடியவராக இருப்பீர்கள். ஆனால் மோசமான போர் வன்முறை மற்றும் பாலியல் குற்றங்களைப் புரிந்தவர்களினூடான ஒரு சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்பவராக நீங்கள் இருக்கும் பொழுது, உங்களது சமூகத்தின் கூட்டு ஆன்மாவானது இவ்வாறான மிருகத்தனமான பயங்கரமான போர்க்குற்றங்களைப் புரிந்தவர்களால் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பொழுது, இவ்வாற போர்க் குற்றங்கள் புரிந்தவர்களின் உணர்ச்சிகளை பகிர்ந்தும் பகிராததற்கும் அப்பால், அவர்களின் குற்றங்களைக் கூட்டாக நியாயப்படுத்துகின்ற சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றபோது, நீங்கள் தார்மீக அறந் தொடர்பான அதல பாதாளப் படுகுழியில் வீழ்வீர்கள். ஏனெனில் நீங்கள் எவ்வாறு உங்கள் தோலை உரித்துக்கொண்டு வெளியில் வரமுடியாதோ, அப்படித்தான் சமூகத்தின் கூட்டு அடையாளத்திலிருந்தும் நீங்கள் உடனடியாகப் பாய்ந்து வெளிவர முடியாது. நாம் எந்தவிதமான குறிப்பிடத்தக்க எதிர்ப்புகளையும் காட்டாது இருந்தமையானது இவ்வாறான அழிவுகள் நடைபெறுவதற்கு நாமும் உடந்தையாக இருந்ததையே காட்டுகின்றது. சுய சீரழிவு நமக்குள் ஏற்படுவதற்கு இந்த நிலை காரணமாக இருக்கின்றது. இது தார்மீகம், அறம் தொடர்பானது ஆகவே வெளியே தெரியாது. இவ்வாறான இனப் படுகொலையும் அழிப்பும் போர்க் குற்றங்களும் நடப்பது தொடர்பான சிறிதளவான அக்கறைகூட காட்டாமல் விட்டமையால், நாம் ஒரு கூட்டுச் சமூகமாக இருக்கின்றோம் என்பதைக் கூறுவதற்கான தார்மீக அடிப்படையைக் கூட நாம் இழந்துள்ளோம். எங்களுடைய குற்றவுணர்வானது எங்களது ஆன்மாவை முடமாக்கியுள்ளது. அது நமது ஆன்மாவை உள்ளிருந்தே அரிக்கிறது.. ஒரு சிங்களவராக நான் பெற்ற அனுபவம் இதுதான்.

**தமிழர் - சிங்களவர் உணர்வுத் தோழமை (Solidarity) பற்றி என்ன கருதுகிறீர்கள்? தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் சிங்கள முற்போக்குவாதிகளின் பங்கு எவ்வாறு அமைய முடியும்?**

மே 2009இல் இடம்பெற்ற தமிழ் மக்களின் இன அழிப்பின் பின் நாம் ஒரு முக்கியமான வரலாற்றுக் கால கட்டத்தில் நிற்கிறோம். 'முற்போக்கு', 'உணர்வுத்தோழமை' போன்ற சொற்களை நாம் திரும்பிப் பார்த்துப் புதிதாக வரைவிலக்கணம் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இதுவரை காலமும் இந்தச் சொற்களுக்கு நாம் வழங்கி வந்த அர்த்தமும் வரைவிலக்கணமும் தமிழ் மக்களின் இன அழிப்பின் பின் மிகுந்த நெருக்கடியை எதிர்கொள்கின்றன. இந்த இனப்படுகொலை உலகத்தை உலுப்ப வேண்டிய ஒரு பேரழிவு. இத்தகைய சூழலில் மௌனம் பேணுவது நடுநிலை என்று அர்த்தம் தராது. மௌனம் என்பது மறைமுகமான அங்கீகாரம். 'குறிப்பிடத்தக்க அளவு சிங்கள முற்போக்காளர்கள் படுகொலைகளுக்கு எதிராக இருந்தார்கள்' என்பது உண்மைதான். எனினும் இன்னும் பலர் அயானஸ்கோவின் 'காண்டாமிருகம்' எனும் அபத்த நாடகத்தில் வருகிற காண்டாமிருகங்கள் போல மாறிவிட்டனர். போர் தமிழ் மக்களுக்குக் கொண்டு வந்த பேரழிவுகள் ஒருபுறம் என்றால், மறுபுறம் அது சிங்கள மக்களுக்கு என்ன செய்தது என்பதை நாங்கள் பார்க்க வேண்டியிருக்கிறது. முல்லைத் தீவு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற இடங்களுக்குச் செல்பவர் எவரும் போர் ஏற்படுத்திய அழிவுகளை நேரடியாகப் பார்க்கக்கூடியதாக இருக்கும். அந்த அழிவுகளின் பிரமாண்டம் உங்களை அதிர்ச்சியில் ஆழ்த்தும். தமிழ் மக்களின் ஒன்றிணைந்த தேசிய வாழ்வு போருக்குப் பின்னர்கூட எப்படிச் சிதைக்கப்பட்டு வருகிறது என்பதை நீங்கள் பார்க்க முடியும். ஆனால் போர், சிங்கள மக்களிடம் ஏற்படுத்தியிருக்கிற அறம் மற்றும் தார்மீகச் சீரழிவை (Moral Degeneration) நீங்கள் கண்ணால் பார்க்கமுடியாது.

"தமிழ் மக்களுக்கு எதிராக எத்தகைய குற்றத்தையுமே புரியவில்லை" என்று அவர்கள் சொல்வதை எடுத்துக் கொள்ளுங்கள். எங்கள் மனதில், சிங்கள மக்களின் மனதில் உண்மையாகவே தமிழ் மக்களுக்கு நடந்த கற்பனைக்கும் எட்டாத பயங்கரங்கள் நன்றாகத் தெரியும். அது எப்படி என்று நீங்கள் கேட்கக்கூடும்.

இருபது ஆண்டுகளுக்கு முன்பு இலங்கை அரச படையினரின் மோசமான முரக்கத்தனத்தை நாம் பார்க்க நேர்ந்தது. 1987-1990 காலகட்டத்தில் ஏறத்தாழ 60,000 சிங்கள இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களுடைய உடல்கள் ஆற்றில் வீசப்பட்டன. 'டயர்' போட்டு எரிக்கப்பட்டன. எங்களுக்கெனவும் மனிதப் புதைகுழிகள், கடத்தல்கள், 'காணாமற்போதல்கள்', வன்புணர்வுகள், அன்னையர் முன்னணி போன்ற அமைப்புக்கள் என எல்லாமே இருந்தன. நினைவுச் சின்னங்களும் மரித்தோருக்காக எழுப்பப்பட்டன. எனவே இலங்கை அரசு என்னவெல்லாம் செய்யும் என்பது சிங்கள மக்களுக்குத் தெரியாததல்ல. எங்களுக்கு இத்தகைய அநியாயங்கள் நடக்கும்போது, "அவற்றுக்குப் பொறுப்பாக இருந்தது இலங்கை அரசு" என்று சொல்ல நாங்கள் தயங்கியதில்லை. ஆனால் இப்போது இவ்வளவு அநியாயங்களும் தமிழர்களுக்கு நிகழ்கிற போது, "இலங்கை அரசு இப்படியெல்லாம் செய்யாது" என்று சிங்கள மக்கள் சொல்கிறார்கள்! ஒடுக்கப்படுகிற சிங்கள மக்களைக் கூட இத்தகைய கருத்து நெருக்கமாக இந்தக் கொலைகார அரசிடம் இணைத்துவிடுகிறது.

எங்களுடைய அரசியல், அறவியல் அடிமைத் தனங்கள் இவைதான். இந்தத் தளைகளை வேறு எவரும் அகற்றமுடியாது. இவை நாமாகவே மாட்டிக்கொண்ட தளைகள். இந்த நச்சுத் தளைகளை உடைப்பதில்தான் எங்களது – சிங்கள மக்களது – தார்மீக, அரசியல் விடுதலை தங்கியுள்ளது. உணர்வுத் தோழமை, முற்போக்கு என்பதன் அர்த்தத்தைப் பற்றி மீளச் சிந்திப்பதற்கு இது ஒரு முன் நிபந்தனையாகும்.

'எவ்வாறு இந்தத் தளையை உடைப்பது?' என்று நீங்கள் கேட்கலாம். அதற்கு ஒரே யொருவழிதான் உண்டு. எங்களுடைய நேரடியானதும் மறைமுகமானதுமான இரண்டு தளங்களிலும் எங்களுடைய ஒப்புதலோடுதான் தமிழ் மக்களின் இனப்படுகொலை எங்கள் கண்முன்னால் நிகழ்த்தப்பட்டது என்பதற்கான பொறுப்பை நாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அத்தகைய ஒப்புதல் மூலம் மட்டும் தான் இன அழிப்பை நிகழ்த்திய இலங்கை அரசிடமிருந்து நாங்கள் விலகிக் கொள்ள முடியும். இலங்கை அரசிடமிருந்து மட்டுமல்ல இனப்படுகொலைக்குத் துணைபோன உலக வல்லரசுகளிடமிருந்தும் நாங்கள் விலகிக்கொள்ளமுடியும். இன அழிப்பை மூடி மறைக்க இவர்கள் எல்லோருமே முயற்சி செய்கிறார்கள்.

சிங்கள மக்களின் கூட்டு அடையாளம் என்பது தமிழ் மக்களின் இனப்படுகொலையை நிராகரிப்பதிலும் அதனை நியாயப்படுத்து-வதிலுமே தங்கியிருக்கிறது. எனவே இனப் படுகொலை தொடர்பான எங்கள் பொறுப்பை ஒப்புக்கொள்வதன் மூலம் ஒரு புதிய, தீவிரமான அரசியல் வழிமுறை ஒன்றை நாங்கள் தொடங்கலாம். இப்படி நாங்கள் செய்வது 'தோற்றுப் போய்விட்ட' தமிழர்களுக்கு நாங்கள் வெளிப்படுத்துகிற பெருந்தன்மை அல்ல. மாறாக, எங்களது வெட்கம் மிக்க தார்மீக அடிமைத்தளையிலிருந்து எம்மை விடுவிப்பதற்கான ஒரு வழி. இது ஒன்றுதான் ஒடுக்கப்படுகிற தமிழ் மக்களுடன் அர்த்தம் பொதிந்த ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு வழி அமைக்கும். சிங்கள – தமிழ் உணர்வுத் தோழமைக்கான முதலாவது படி இங்கிருந்து தான் ஆரம்பமாகவேண்டும்.

*- தமிழில் மீராபாரதி*

■ ■ ■



கலாநிதி ஜூட் லால் பெர்னாண்டோ நீர்கொழும்பில் பிறந்தவர். சிங்கள முற்போக்காளர்களுடனும் 'ஹிரு' பத்திரிகையோடும் பணியாற்றியவர்.

இப்போது, புலம் பெயர்ந்து அயர்லாந்தில் வாழ்கிறார். இலங்கையில் சமாதானத்துக்கான ஐரிஷ் அவையின் முக்கியமான செயற்பாட்டாளர்.

டப்ளினில் உள்ள ட்றினிட்டிக் கல்லூரியில் விரிவுரையாளராக இருக்கிறார்











# முள்ளிவாய்க்கால்:

## ஆழ்ந்த சோகத்திலும் துணிவுடன் போராடிய தருணம்

- ஜூட் லால் பெர்னாண்டோ

முள்ளிவாய்க்காலிலும் மற்ற இடங்களிலும் ஆயிரக்கணக்கணக்கான தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். அவர்களின் துயரமான மரணங்கள் நம் இதயங்களில் மிக ஆழமாக உறைந்து, நம்மை இன்று கண்ணீர் சிந்தவைக்கின்றன. அவர்கள் எல்லாம் யார்? அவர்கள் நம் அழகான குழந்தைகள், துணிவு மிகுந்த இளம் வயது மகன்கள் மற்றும் மகள்கள், பாசம் நிறைந்த பெற்றோர்கள் மற்றும் தாத்தா, பாட்டிமார்கள். அவர்களைப் புதைத்த இடம் எங்கு இருக்கிறது என்று கூட நமக்குத் தெரியாது.

இன்றைய நாளில் ஒரு சிங்களவன் என்ற முறையில், ஆயிரக்கணக்கான தமிழர்களின் மரணங்கள் மட்டுமின்றி நான் வசிக்கும் சிங்கள நாட்டின் மனித நேயமும் இறந்து விட்டது என்றே எனக்கு எண்ணத் தோன்றுகிறது. பல ஆயிரக்கணக்கிலான என்னுடைய தமிழ்ச் சகோதரிகள் மற்றும் சகோதரர்களின் கல்லறைகளில் என்னுடைய தேசம் கட்டப்படுகிறது.

வியட்நாம் மக்களை அமெரிக்கா கொன்று குவித்தபோது, Martin Luther King, தன்னுடைய சொந்த தேசமான அமெரிக்கா தான் இதற்கு காரணம் என்று வருந்தி கண்ணீர் சிந்தினார். உடனலம், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற நலத்திட்டங்களுக்கு பணத்தை செலவிடாமல் நம் தேசம் இப்படி செய்கிறதே என்று அவர் கண்ணீர் சிந்தினார்.

தனித்தமிழ் ஈழத்திற்கான போராட்டம் இன்னும் ஓய்ந்த பாடில்லை. ஆனால் மனித நேயம் தோற்றுப்போய்விட்டது. வன்னியில் கொடூரமான முறையில் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். அவர்களின் கோரமான மரணம் தனித்தமிழ் ஈழத்தைக் கொடுத்தால் கூட ஈடு செய்ய முடியாது என்று மனசாட்சி உள்ள ஒவ்வொரு சிங்களவனுக்கும் தெரியும்.

பூமியில் ஒரு சிறிய கிராமம் போன்று விளங்கும் இந்த நாட்டில், முள்ளிவாய்க்காலில் 21ம் நூற்றாண்டில் மனித நேயம் செத்து விட்ட சம்பவம் சரித்திரப் பிரசித்தி பெற்று விட்டது. வன்னியில் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்ட சம்பவம் நீதிக்கு எதிரான கொடுஞ்செயலாக ஆகிவிட்டது.

முள்ளிவாய்க்காலில் நடந்த அரசியல் ரீதியான உண்மை எது?

பிரித்தானியக் காலனி ஆதிக்கத்திலும் முள்ளிவாய்க்காலில் தான் கொடூரம் உச்சக்கட்டத்தை அடைந்து, Sri Lankan State (இலங்கை) இல் மக்கள் கோரமாகக் கொலை செய்யப்பட்டனர். 1948ல் சுதந்திரம் கிடைத்த பிறகும், சிங்கள ஆளும் கட்சியினர், மீண்டும் மீண்டும் இந்தக் கொடுஞ்செயலில் ஈடுபட்டுக்கொண்டுதான் இருக்கின்றனர்.

தமிழர்கள் மீதான இந்தப் படுகொலைகள் பற்றிக் கடந்த 60 வருடங்களாக, சிங்களவர்களுக்கு ஒன்றுமே தெரியாதா?

1983 மற்றும் 2009ல் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதும் அவர்களுக்குத் தெரியாதா?

1983ல் இலங்கை அரசின் காட்டுமிராண்டிக் கொலை வெறியர்களே படுகொலைகளைச் செய்தனர். 2009ல் சில உலக வல்லரசு நாடுகளின் முழு ஆதரவுடன் இலங்கை இராணுவம் தமிழர்களைக் கொன்று குவித்தது.

இந்தப் படுகொலைகளை இலங்கை அரசு தெரிந்தே செய்கிறது. சிங்களவர்களும் மனிதர்கள் தான். இந்த மிருகத்தனமான செயல் பற்றி அவர்கள் என்ன நியாயம் கற்பிக்கப் போகிறார்கள்?

'இந்தக் கொலைகள் எல்லாம் தங்கள் நாட்டின் பாதுகாப்புக் கருதியே' என்று ஒரு வேளை அவர்கள் வாதம் செய்யலாம். அது சரிதானா? இல்லையென்றால் விடுதலைப் புலிகளிடமிருந்து தமிழர்களைப் பாதுகாக்கவே இப்படிச் செய்கிறோம் என்றும் அவர்கள் கூறலாம்.

ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானைத் தாக்கியதற்கு அமெரிக்காவும் இப்படித்தான் காரணம் கூறுகிறது. பாலஸ்தீனத்தினத்துக்கும் இதே வாதத்தைத்தான் இஸ்ரேல் முன் வைக்கிறது.

இலங்கை நாட்டின் இறைமையைக் காப்பாற்ற இத்தகையை படுகொலைகளை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது என்று இலங்கை அரசு நொண்டிச் சமாதானம் கூறுகிறது.

ஐ.நா சபைக்கும் மற்றும் உலக சமூகத்திற்கும் இதுபற்றித் தெரியுமா? எதற்காக இந்தப் படுகொலைகள் நடத்தப்பட்டன என்று சிங்களவர்கள் தெரிவித்துள்ளார்களா? இலங்கை நாட்டைக் காப்பாற்றவே இந்த நடவடிக்கை என்பதே அவர்களின் வாதம். ஆகையால் தான் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டார்கள் என்று அவர்கள் மார்தட்டிக் கொள்கிறார்கள்.

ஒன்றை மட்டும் நான் கூற விரும்புகிறேன். 21 ஆம் நூற்றாண்டில் தமிழ் இனத்தையே பூண்டோடு ஒழிக்கவேண்டும் என்று மிருகத்தனமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் ரட்சகர் எனக்கூறிக் கொள்ளும் விடுதலைப் படைகளும் இதில் குற்றவாளிகள் தான்.

தமிழ் மக்கள் தான் சரியாகத் திட்டமிட்டு தங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்க வேண்டும். Martin Luther King மற்றும் Nelson Mandela ஆகியோரின் கருத்துகளை தான் நான் எதிரொலிக்க விரும்புகிறேன். நீதியை நோக்கிய பயணம் நெடியதாக இருந்தாலும்

தொடர்தல் 76ம் பக்கம்

முள்ளிவாய்க்கால் தீயுண்டநிலம்

# ஒரு மூன்றாவது மனுஷியின் நாட்குறிப்புகள்



- சுல்பிகா இஸ்மாயில் -

### ஏப்பிரல் 26, 2009

இரவிரவாக இந்திய நண்பர்களுடன் வாதிட்டதும் ஏதோ ஒரு ஆபத்து நடந்து கொண்டிருக் கின்றது என்ற உயிரை அலைக்கும் திகில் உணர்வும் மீண்டும் மீண்டும் வந்து மனதில் அலை மோதிக்கொண்டிருந்தன. அடிலெயிட் செல்வதற்காக ஏப்ரல் 26ந்திகதி சிட்னி விமான நிலையத்திற்கு வந்திருந்தேன். இலங்கைத் தமிழர்கள் இருவர் பெருங் கலவரத்துடன் பேசிக் கொண்டிருந்தனர். ஒருவர் அடிக்கடிக் கண்களைத் துடைத்துக் கொண்டு அக்கம் பக்கம் திரும்பித் திரும்பிப் பார்த்தபடி அழுது கொண்டே அமர்ந்திருந்தார். ஏதோ ஒருவித உணர்வு அவர்களது உரையாடலுக்குள் என்னை இணைத்துக் கொள்ளத் தவித்தது. நானும் மீண்டும், மீண்டும் அவர்களைப் பார்த்துக் கொண்டேயிருந்தேன். அவர்களருகில் சென்ற போது 'நீங்களும் தமிழா' என்று கேட்டுக் கொண்டே கதைத்தபடி இருந்தனர். உடல் அதிர்ந்து போயிற்று ஒருமுறை. அவர்கள் கதைப்பது காதில் விழுந்ததே தவிர, உடலனுக்கள் அனைத்தும் உறைந்தது போல் ஓர் உணர்வும் வலியும் என்னுள். அங்கிருந்த ஒருவரது குடும்பத்தவர்கள் பல மாத அலைச்சல்களுக்குப் பின் பல்வேறு இடங்களிலிருந்து வந்து எங்கோ ஓரிடத்தில் ஒன்றிணைந்திருந்தனராம். நான்கு நாட்களுக்கு மேலான பசியை ஆற்றுவதற்கு எதுவும் கிடைக்காமல் அங்க லாய்த்துக் கொண்டிருக்கையில், பாதுகாப்பு வலயத்தின் மீது நடத்தப்பட்ட பாரிய குண்டுத் தாக்குதலில் அவர்கள் உட்பட 25 பேருக்கு மேற்பட்டோர் ஒரேயிடத்திலேயே மரணமடைந்துள்ளதாக செய்திகள் வந்துள்ளதாகக் கூறினர். பேர்லினில் பேரணி ஒன்று நடப்ப தாகவும் புலிகள் ஒருதலைப்பட்சமாகப் போர் நிறுத்தம் கோரியும் இலங்கை அரசு மறுத்து விட்டதாககவும் கூறி இனி எதிர்பார்ப்பதற்கு எதுவுமில்லை என்று வருந்தினார். முதல் நாள் நள்ளிரவு ஆந்திர நண்பருடன் வாதித்தது ஞாபகத்திற்கு வந்து போனது. 'இந்தியா இறுதிவரை தமிழ் மக்களைக் கைவிடாது, யுத்த நிறுத்தம் சாத்தியமாகும்.' ஆனால், எல்லாமே பொய்யாகி இங்கே மக்கள் மாண்டழிகின்றரே என ஓலமிட்டது என்மனம்.

அடுத்த கணத்தின் அவலமறியாது கையில் கிடைத்ததைப் பற்றிக் கொண்டு எவ்வளவு நம்பிக்கையுடன் அவர்கள் ஒடிக்கொண்டிருந் தனர். தாரை தாரையாக மக்கள் வீதிகளில் வழிந்து நிறைந்த காட்சிகள் மீண்டும் மீண் டும் வந்து போயின. விமானத்தில் இருந்து இறங்கியதும், மீண்டும் Internetஐப் பொருத்திக் கொண்டு ஏதாவது நல்லது நடத்திருக்கும் என்ற நம்பிக்கையில் இணையத் தளத்திற்குத் தளம் தாவி அலைகின்றது இந்தப் பாழ்பட்ட மனம். கண்முன்னே கரைந்த, முன்னொரு போதும் அறியாத மனித உறவொன்றின் கன்னங்களில் வழிந்த கண்ணீரும் அதன் தடயங்களும் மாறி மாறி மனத்திரையில் வந்துபோயின. ஒரு கணத்தில் உயிர் நீத்த உறவுகளின் நிலைகள் படக்காட்சி போல் மனதில் விரிந்தன. உயிர் ஒருமுறை மீண்டும் நடுங்கிற்று. ஓலமிட்டது என் மனம். எதிர் பார்க்காத ஏமாற்றங்களை எங்கு சென்று கொட்டிக் கொள்வது?

### ஏப்பிரல் 27, 2009

சமைப்பது, உணவுண்பது, எப்போதாவது மன ஆறுதலுக்காக வெளியில் செல்வது தவிர அடிலெய்டில் எல்லோருமே (முழுவதும் இந்திய நண்பர்கள் - தமிழர்கள், மலையாளிகள், பஞ்சாபிகள் உட்பட) TV, Radio, Internetஇன் முன்னால் தவமாய்க் கிடந்தோம். 'ஆறுதலான ஒரு செய்தியாவது வராதா!' என்ற அங்கலாய்ப்புடன். இவ்வளவு காலமும் இந்திய அரசுக்காக வாதிட்ட அவர்களும் இப்போது வாய் மூடிக் கிடந்தனர். 'இந்திய அரசு ஏதாவது செய்யாதா' என்ற ஆதங்கம் அவர்களுக்குள்ளிருந்தும் வெளிவர ஆரம் பித்திருந்தது. எனினும் அவர்கள் நம்பிக்கை யுடனேயே பேசினர். ஒவ்வொரு நாளும் அவலம் அதிகரித்ததே தவிர குறைந்தபாடில்லை. சர்வதேச சமூகத்தின் மீதும் ஆத் திரங்களை கொட்டித்தீர்த்தனர். என்னால் எதுவும் பேச முடியவில்லை. இம்முறை அவர் களும் எதுவும் என்னுடன் வாதிடவுமில்லை. மௌனம் எல்லாவற்றுக்கும் போதுமானதாக இருந்தது.

### மே 05, 2009

இலங்கைக்குப் புறப்படுவதற்காக அடிலெய்டி லிருந்து சிட்னி விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்தேன். சிட்னியிலிருந்து சிங்கப்பூர் வந்தவுடன் விமான நிலையத்தில் Internet இற்குள் மீண்டும் புகுந்து கொண்டேன். ஆறு மணித்தியாலங்கள் அதிர்ச்சி மேல் அதிர்ச்சியான செய்திகளை இணையங்கள் சுமந்து வந்தன. மூன்று லட்சத்திற்கு மேற் பட்டோர் இருப்பதாகவும் அவர்கள் தாக்குதல் வலயத்திலிருந்து வெளியேறிக் கொண்டிருப் பதாகவும் இரசாயனக்குண்டு வீசப்படுவதா கவும் கருகி எரியுண்ட சடலங்கள் எங்கும் சிதறிக் கிடப்பதாகவும் 6,500இற்கும் மேற் பட்ட சடலங்களை அன்று அடக்கம் செய்த தாகவும் TRO கூறியிருந்தது. Channel 4 இனது வீடியோ பார்த்தேன். இடைத்தங்கல் முகாம்கள் காட்டப்பட்டன. மனித உயர் விழுமியங்கள் அடியோடு சாம்பலாகிய திடல்களில் குழந்தைகளும் பெண்களும் ஒதுங்கியிருந்தனர். ஆண்கள் பிரிக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர்.

'20 வருடம் போராடும் சக்தியிருக்கின்றது' என்று மக்களுக்கு நம்பிக்கை அளித்தவர்கள் எவ்வாறு தாங்களும் அழிந்து, மக்களையும் அனாதைகள் ஆக்கிவிட்டு, ஆடு நனைகின் றதாக அழுகின்ற ஓநாய்களிடம் மக்களை ஒப்படைத்தனர்? எது அவர்களுக்கு முடியாது போயிற்று? அஹிம்ஸாவாதம் பேசிக் கொண்டு அக்கிரங்களையும் அட்டுழியங்களையும் உவப்போடும் உக்கிரத்தோடும் செய்கின்ற உத்தமர்களுக்காக புத்தரின் சிலையின் முன்னால் பிரித் ஓதப்படும் காட்சியும் வந்து போனது. சர்வதேசமும் முற்றிலுமாய்ச் செயலி ழந்து போனது போலாயிற்று... UNHCRஉம் செஞ்சிலுவைச் சங்கமும் அலறுவதைத்தவிர. அவர்களிடமும் அவர்கள் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்ளுமாறு இறுமாப்போடு பதிலளித்தது அரசு.

### மே 06, 2009

விமானத்திலேறி கொழும்பை அடைந்ததும் மீண்டும் Internetஇற்குள் இறங்கி அலையும் போதுதான் இங்கு இணையத் தளங்கள் பலவும் இடைநிறுத்தப்பட்டிருந்தன எனத் தெரிய வந்தது. இங்கு TV, Radio, பத்திரி கைகள் போன்றன எதுவும் நடக்காதது போல வும் இராணுவம் மக்களை பாதுகாத்து வெளி யேற்றிக் கொண்டிருப்பதாகவும் காட்டிக் கொண்டிருந்தன. அப்போதுதான் திடீரென தகவல் தரும் எல்லா வாயில்களும் இங்கு மூடப்பட்டிருந்ததை உணர்ந்தேன்.

'மக்கள்', அரசின் வெற்றியை, நாளுக்கு நாள் முன்னேறுவதை, நில ஆக்கிரப்பை, பிரமிப் புடனும் மகிழ்வுடனும் பரிச்சயமற்ற கற்பனை மொழிகளில் பேசிக்கொண்டிருந்தனர். பிணங் கள், சடலங்கள், தசைத்துண்டுகளின் எண் ணிக்கைகளைப் பார்த்து வியந்து பேசினர். கரைகள் தெரியாத கடலிலுள் அமிழ்ந்து போகும் போது கையுயர்த்தி அலறுபவரின் கரங்களில் வெற்றிக் கொடிகளிலிருப்பதாக தொலைக் காட்சிகள் படங்காட்டிக் கொண் டிருந்தன. நான் வேறு கிரகத்திற்கு வந்து விட்டிருப்பதை உணர்ந்தேன். புத்த விகாரை களெங்கும் மக்கள் பிரார்த்தனைகளில் ஈடு பட்டிருந்தனர். தம்மக்கள் எவ்வளவு நிலங் களை கைப்பற்ற வேண்டும், எத்தனை பேரைக் கொன்றொழிக்கவேண்டும், எத்தகைய உயர் பதவிகள் தம் வீரமக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்று மண்டியிடுவோரும், முழுமை யாக உயிரோடு திரும்பி வரவேண்டும் என்ற மன்றாடுவோரும் இதில் இணைந்து கொண் டனர். வன்னியில் உள்ள மக்களுக்கு எது வுமே நடக்காதது போலவும் காட்டிலிருந்து ஊருக்குள் புகுந்த புலிகளை அழித்து, அவர் களை இராணுவம் காத்து வருவதாகவும் இவர்களுக்குக் சொல்லப்படுகிறது. மனச் சாட்சி உள்ளவர்களினதும் மனுதர்ம சாஸ்த் திரங்களினதும் நீண்ட மௌனம். மனங்க ளோடு சேர்ந்து கண்களையும், காதுகளை யும் உடலின் உணர்வுச் சக்திகள் அனைத் தினையும் அறைந்து அவர்கள் பொத்திக் கொண்டனர். என் பொழுதுகள் தடை செய்யப்பட்டிருக்கும் இணையங்கள் தந்து கொண் டிருக்கும் செய்திகளுக்கும் அப்பால் இடைத் தங்கல் வதை முகாம்கள் பற்றியும் சாட்சி யமற்றதாகிக் கொண்டிருக்கும் அழிவுகளின் தொடர்ச்சி பற்றியும் கொத்துக் கொத்தான மொத்தமான கொலைகள் பற்றியும் நினைந்து நினைந்து கரைந்து கொண்டிருந்தன. கண் டிக்கும் கொழும்புக்கும் எத்தனை வித்தியா சம். கண்டி தன்குளிரில் உறைந்து போயி ருந்தது. யாருக்குமே எதுவுமே நடக்காதது போல தலதாவின் பிரித் மந்திரங்கள் மாத்திரம் இடையறாது ஒலித்துக்கொண்டே இருந்தன. அங்கு அவர்களுக்கு எல்லாம் சாந்தமாகவே இருந்தன. கனவுகளில் சஞ்ச ரித்துத் திரும்பும் மனிதர்கள் 'ஆ... அப்ப டியா?' என வினவி மறைந்தனர். சீனர்களும் இந்தியர்களும் 'யார் உதவி அதிகம்' என் பதில் போட்டியிட்டுக் கொண்டனர். அவுஸ் ரேலியாவிலிருந்து Skype மூலம் செய்திகளை அனுப்பிக் கொண்டிருந்தனர் என் இந்திய நண்பர்கள்.

### மே 18, 2009

மே மாதம் 6ம் திகதிக்குப் பின் தகவல்கள் தெரியாத வேற்றுக் கிரக வாசியாய் அலைந்த அலைவுக்குள் ஒரு நாள், மே 18ம் திகதி காலை வெள்ளவத்தை வெளிச்சந்தையில்

தொடர்தல் 76ம் பக்கம்

# உங்களுக்கு ஒரு நாடு

## முள்ளிவாய்க்கால் அவலத்தில் எழுந்த சிங்களக் கவிதைகள்

### பாலச்சந்திரன்

- மஞ்சுள வெடிவர்த்தன -

சிறு நிலா
சிறு நிலாவா?
அதைச் சொல்லவும் கூடுமோ?

பத்துத் திக்கும் சுடரொளி வீசிய
சூரியனைக் கொன்றது சிங்கம்

தாய்நிலத்தைச் சூழ்ந்த குருதியால்

சுவரோவியங்கள் வரையப்படுகின்றன

சினத்துடன் சிங்கம்
சிறு நிலாவையும் கொன்ற போது
முகில்களின் திரையைக் கிழித்து
உள்ளே ஒளிந்தது நிலா
பயத்தில்
ஒடுங்கின நட்சத்திரங்கள்

இருளின் சஞ்சாரம்

நிலா சூரியனாக மாறுகிற ஒரு நாள் வரும்
அப்போது
எங்களுக்கு ஒளிவதற்கும் இடம் கிடையாது.

■ *ஜூலை, 2009*



மஞ்சுள வெடிவர்த்தன(37), "ராவய" சிங்கள வார இதழில் பணியாற்றியவர். இவரது முதலாவது சிறுகதைத்தொகுதி 'மரியாவும் மேரியும்' வெளியானபோது தெய்வநிந்தனை என்னும் குற்றச்சாட்டில் இலங்கையின் கத்தோலிக்கத் திருச்சபையால் கண்டனத்துக்கு ஆளாகியது. அந்தக் குற்றச்சாட்டில் இலங்கைப் புலனாய்வுத்துறையால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார். நூலும் தடை செய்யப்பட்டது. இரண்டு கவிதை நூல்களும் ஒரு நாவலும் வெளியாகியுள்ளன. தமிழ்மக்களின் போராட்டத்துக்கு ஆதரவாகச் செயற்பட்டமையால் இலங்கை அரசின் துன்புறுத்தலுக்கு ஆளாகினார். இப்போது பிரான்சில் அரசியல் தஞ்சம் பெற்று வாழ்ந்து வருகிறார்.

**சிங்களத்திலிருந்து தமிழில்: சாமிநாதன் விமல்/சேரன்**


### ஐந்தாவது கனவு: நீலத் தரப்பாள் சிதை

- அஜித் ஹேரத் -

நீலத் தரப்பாள் குடிசையும்
அதனுள் தொட்டிலும் எரிகிறபோது
உன் பிஞ்சுக் கைகளும் கால்களும் எரிய
வெளியில் தவழ்ந்து வந்தாய்
அச்சம் நிறைந்த உன் போராட்டத்தை
கையறு நிலையில் பார்க்கிறேன்
ஒரு கணம் எங்கள் கண்கள்
சந்தித்துக் கொள்கின்றன
அதை நீ கவனித்தாயா என்பதை
நான் ஒரு போதும் அறியப் போவதில்லை
உறைந்து போயிருந்த என்னைக் கடந்து சென்று
குழிக்குள் விழுந்தாய்

பிணங்களுடனும் புகையுடனும்
மறைந்து போய் விட்டாய்
அந்தக் குழியை மண்ணால் மூடி
ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்பின
புல்டோசர்கள்
அவை மெல்ல மெல்லத் தொலைவு கொண்டு
மறைந்தாலும்
எனக்குத் தெரிவதெல்லாம்
மண்ணின் மேல் உன் பிஞ்சுக் கை
■

அஜித் ஹேரத், தற்காலச் சிங்கள இலக்கியத்தின் மிக முக்கியமான கவிஞர். "ஹிரு" இதழின் ஆசிரியராக இருந்தவர். தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவாகச் செயல்பட்டதால் இலங்கை அரசின் கொலைக்கரங்களுக்குத் தப்பி ஐரோப்பிய நாடொன்றில் அரசியல் தஞ்சம் பெற்றுள்ளார்.



### தொலைந்த நிலம்

- மாலதி கல்பனா அம்புரோஸ் -

இடம் பெயரும் உறைந்த மென்காற்று
குரலற்று அலகு இழந்த பறவைகள்
இலைகளும் நிழல்களுமற்ற மரங்கள்
முகிழ்த்தாலும் மலர முடியாமல் விம்மும் பூக்கள்

உதிர்ந்து விழ அஞ்சும் ஒரேயொரு கண்ணீர்த் துளி
சுவரை உடைத்துவிடத் துடிக்கும் ஒரேயோரு நெடுமூச்சு
பாட எவருமே அற்ற மாபெரும் பாடல்
ஆன்மாவைத் தொலைத்துவிட்ட
ஒரு சொர்க்க நிலம்
■



மாலதி கல்பனா அம்புரோஸ் சிங்களத்திலும் தமிழிலும் கவிதைகள் எழுதுபவர். கவிதைத் தொகுதியொன்றும் வெளியாகியுள்ளது. அவருடைய எழுத்துக்களைப் பார்க்க: http://hapifly.blogspot.com/

ஓவியங்கள் : டிராட்ஸ்கி மருது

# உங்களுக்கு ஒரு நாடு

## முள்ளிவாய்க்கால் அவலத்தில் எழுந்த சிங்களக் கவிதைகள்



### நானொரு தமிழன்!

- மகேஷ் முனசிங்க -

வீரசேனவை வேலையை விட்டு நிறுத்தியபோது
நெசவுத் தொழிற்சாலைக்கு மேலே,
சூரியனில் தீ பற்றிக் கொண்டபோது..
சுலோகங்களைக் கத்திக் கொண்டும்
கரகரத்த குரலில் உரத்துக் கூக்குரலிட்டுக் கொண்டும்
தோழர் நடேசன் மறியல் போராட்டத்தில் நின்றார்..
அப்போ நானொரு தமிழன்

வீரவுக்கு திரும்பவும் வேலை கிடைத்தபோது..
தோளில் ஏறி அமர்ந்து..
'நடே நீ நீடுழி வாழ்வாய்...!'
வெற்றி அரசன் வெற்றி அணியில்
அப்போ நான் ஒரு தமிழன்

வேலை நிறுத்தத்தை உடைத்தபோது
சிறீபாலவைச் சுட்டார்கள்..
அவனை என் கைகளில் தூக்கிக் கொண்டு
ஆஸ்பத்திரிக்கு ஓடியபோது...
அப்போ நானொரு தமிழன்

'சேலைன்' ஊசியை இரண்டு கைகளிலும் ஏற்றி இருந்தபோது..
சிறா, நீ என்னை அணைத்துக் கொண்டு, அழுது
'நடே, நீதான் என் மீட்பர்' என்றாய்
அப்போ நானொரு தமிழன்

குசும் கர்ப்பமாய், ஆஸ்பத்திரிக் கட்டிலில்
செத்துக் கொண்டிருக்கையில்
எமக்குச் சிங்கள இரத்தம் தான் தேவை என்று கேட்கவில்லை
ஓ நெகற்றிவ் குருதியைத்தான் கேட்டார்கள்
என்னிடம் மட்டும் தான் அது இருந்தது..
அப்போ நானொரு தமிழன்

கண்ணீர் சொரிய
எனது கையில் குழந்தையைத் தந்து
'மகனே, நடே மாமாவுக்குத்தான் நீ சொந்தம்'
என்று குசும் சொன்னபோது..
அப்போ நானொரு தமிழன்


மறியல் போராட்ட வரிசையில்
எல்லா இரைச்சலுக்கும் மேலாக
வீரே, உன் சுலோகம் எனக்குக் கேட்கிறது
'தமிழர்களைக் கொல்லுங்கள்!
எங்களுக்குச் சமாதானத்தைத் தாருங்கள்!
எங்களுக்குச் சமாதானத்தைத் தாருங்கள்!
தமிழர்களைக் கொல்லுங்கள்!'

சிறா, இங்கே ஆஸ்பத்திரி இல்லை
இதயமில்லாமல் குண்டு போட்டு
உடைந்து நொருங்கிய
செங்கற்கள் தான் கிடக்கின்றன

குசும்,
ஓ, என்னருமை குசும்,
காய்ந்த நிலம் கூட உறிஞ்ச முடியாமல்
ஆறாக ஓடும்
ஓ நெகற்றிவ் குருதியை
நீ இப்போ பார்த்தாயானால்...

எம் மகன்களையும் பேரர்களையும் கொன்று குவித்த
என் இனத்தின் மயானத்தில்
என் கடைசி மூச்சை விடுவதற்குக்கூட
நான் தனிமையில் தவிக்கிறேன்
இருந்தும்
ஓம், நானொரு தமிழன்!

■



எண்பதுகளில் சிங்களக் கவிதை உலகில் நுழைந்தவர். அக்காலத்தைய அரச பயங்கரவாதத்தை எதிர்த்த முக்கியமான கவிக்குரல் அவருடையது. 2000 இல் கனடாவுக்குப் புலம் பெயர்ந்தார். ஏழு ஆண்டுகள் எழுதாமல் இருந்தவரைத் தமிழ் மக்களின் இனப்படுகொலை மறுபடியும் எழுதவைத்து விட்டது.

சிங்களத்திலிருந்து தமிழில்: என்.கே. மகாலிங்கம்

### புதிய அரிச்சுவடி

- கிருஷான் ராஜபக்ச -

ஓடிய சூடான இரத்தமும் கண்ணீரும்
இன்னும் காயாத பொழுதில்
எந்தப் புதிய பாடத்தை
நான் உனக்குப் படிப்பிக்க?

அரிச்சுவடியின் முதல் எழுத்து ஆனா
ஆனால்;
அம்மா
அப்பா
அண்ணா என்று
நீ கேட்பாய்
என்னிடம் பதில் இல்லை
குருதி சிந்திக் கொண்டிருக்கும் இந்த
அரிச்சுவடியின் பக்கங்களை
நான் எப்படிப் புரட்ட?

உனக்கும் இது வேண்டாம்
இன்னும் குருதி கசியும் எழுத்துகளைப் பார்த்து
நீ பயந்து அழுவாய்
என்னால் உன்னை ஆறுதல் படுத்த முடியாது

சொற்களை உருவாக்க
எழுத்துகள் இல்லை மகனே.
அரிச்சுவடியின் ஒவ்வொரு எழுத்தும்
கொடுங்கனவில் மூழ்கியுள்ளது

ஆனா என்று கூறி அம்மாவை அழைத்தாலும்
அன்பை அறியாத அனைவரும் சேர்ந்து
வாழ்க்கையின் சிறந்த பாடத்தை
உனக்குக் கற்பித்துவிட்டார்கள்

மகனே
இனி வரும் காலத்தில்
உருவாக்குவோம் ஒரு புதிய அரிச்சுவடியை.
இணையட்டும் அங்கொரு புதிய கனவு
சாம்பலில் இருந்து எழுந்து நிமிர்ந்த
புதியதோர் உலகம்.

■

**சிங்களத்திலிருந்து தமிழில்: சாமிநாதன் விமல்**

(செட்டிக்குளம் தடுப்பு முகாமில் மரத்தடியில் ஒரு பாடசாலை. 'இன்று என்ன புதிய பாடம்' என்று தன் ஆசிரியரிடம் விசாரிக்கிறான் ஒரு மாணவன். பதிலற்ற ஆசிரியர். இந்த காட்சி அக்கவிதைக்கு மூல காரணமாக அமைந்தது என்கிறார் கவிஞர்).



கிருஷான் ராஜபக்ச, கொழும்பில் வாழும் ஊடகவியலாளர்;கவிஞர். சிறுபான்மை மக்கள் உரிமைகளுக்காகப் பணிபுரிபவர்,இந்த ஆண்டு இறுதியில் அவரது முதலாவது கவிதைத் தொகுப்பு வெளியாக உள்ளது.

## முள்ளிவாய்க்கால் தீயுண்டநிலம்

# இன அழிப்பின் சாட்சியம்

-சுடரினி

2006ல் மட்டக்களப்பில் தொடங்கி பல அழிவுகளை எமது கிழக்கு மாகாண மக்களுக்கு ஏற்படுத்திக் கொண்டு வந்த இராணுவத்தின் முன்நகர்வு 2008 மன்னாரில் மக்களின் வாழ்விடங்களைக் குறுகியதாக ஆக்கிக் கொண்டு நகர்ந்தது. அந்த மே மாதத்தில் போர் உக்கிரமடைந்த போது நான் கிளிநொச்சியில் பரந்தன் சந்தியில் தங்கியிருந்தேன். கிளிநொச்சி கல்மடு, வட்டக்கச்சி ஆகிய இடங்கள் மன்னாரில் இருந்து இடம்பெயர்ந்து வந்த மக்களால் நிரம்பியிருந்தது. அந்த மன்னாரக் கடலோடு உறவாடிய மக்களும் வயல் வெளிகளைத் துறந்து வந்த மக்களும் சொந்தங்களை எறிகணை வீச்சுக்குப் பலியாக்கிய மக்களும் அங்கு நிரம்பியிருந்தனர். இடம்பெயர்ந்த இடங்களில் கொட்டகைகள் போடுவதற்கு முன்னரே பதுங்குகுழிகளை ஏற்படுத்திக் கொள்ள இப்போது அந்த மக்கள் பழகிக் கொண்டிருந்தனர். அப்போது அந்த மக்களுக்கு உதவுவதற்கு என்று ஆஸ்திரேலியாவில் இருந்து வந்திருந்தார் ஒரு பொறியியலாளர். வன்னி மண்ணில் எண்ணற்ற வளங்களை எப்படியெல்லாம் பயன்படுத்த வேண்டுமோ அதை மிகவும் நேர்த்தியாக தன்னால் இயன்ற மட்டில் பயன்படுத்திக் கொள்ளுவார். நாங்கள் அவரை பனம்பழம் மாமா என அன்பாக அழைப்போம். வீதியில் கிடக்கும் பனம்பழங்கள், குறிஞ்சா மற்றும் தூதுவளை இலைகள் ஆகியவற்றை சேர்த்து அதை இடம்பெயர்ந்த மக்களுக்குக் கொடுத்து வருவார்.

எறிகணை வீச்சாலும் இடப்பெயர்வாலும் சோர்ந்து துவண்ட எமது சிறுவர்களை உற்சாகப்படுத்த வேண்டும் என்பதால் நாங்கள் குழுக்களாக அவர்களிடம் சென்று சில மணி நேரம் அவர்களைப் பாட வைத்து, ஓவியம் வரைய வைத்து, சிற்றுண்டிகள் வழங்கி மகிழ்வித்து வந்தோம். அப்போதுதான் எங்களுடன் வந்தான் திலீபன். அவனுக்கு வயது பதினாறு. பனம்பழம் மாமாவோடு அவனுக்கு வாழைப்பழம் என்றும் ஏனையவர்களுக்கு நாவல்பழம், மாம்பழம் என்றும் பெயர் வைத்து குழந்தைகளுக்கு விளையாட்டுக் காட்டி மகிழ்வோம். ஆங்கிலப் புத்தாண்டு பிறந்த போது கிளிநொச்சி முழுவதுமிருந்த மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்திருந்தனர். திலீபனும் விசுவமடு, சுதந்திரபுரம், என இடம்பெயர்ந்து உடையார்கட்டு பாடசாலைக்கு அருகில் ஒரு கொட்டகை போட்டு குடும்பத்துடன் இருந்தான். நான் புதுக்குடியிருப்பில் இருந்து எனது தோழியைப் பார்ப்பதற்காக காந்தரூபன் அறிவுச்சோலைக்குச் செல்ல வேண்டியிருந்தது. காந்தரூபன் அறிவுச்சோலை அப்போது உடையார்கட்டில் குழந்தைகளுடன் இடம்பெயர்ந்திருந்தது. எனக்கு அங்கு செல்ல வழி தெரியவில்லை. சாதுவான மழையில் நனைந்தபடி நான் வீதியில் நின்றிருந்த போது “அக்கா, என்ன இங்க நிக்கிறியள்?” என்றபடி தனது பதுங்குகுழிக்குள் சென்று குடை ஒன்று எடுத்துக் கொண்டு ஓடி வந்தான். அவனும் அவனது தாயாரும் பலமுறை அழைத்தும் நான் போக வேண்டியிருந்ததால் உள்ளே செல்ல மறுத்து அங்கிருந்து வழியை மட்டும் அறிந்து கொண்டு சென்று விட்டேன். சில நாட்களில் அந்தத் துக்கமான செய்தி வந்தது. திலீபனின் பதுங்குகுழியில் எறிகணை வீழ்ந்து அவன் அவ்விடத்திலேயே இறந்து போனான். அவனது தந்தையும் இரத்த வெள்ளத்தில் மிதக்க தாய் அவரை மருத்துவமனையில் சேர்த்து விட்டு மகனின் இறுதி நிகழ்வுகளைச் செய்து முடித்தார். இப்படி ஆயிரம் ஆயிரம் அப்பாவிச் சிறுவர்களும் மக்களும் தினந்தோறும் எறிகணை வீச்சுக்குப் பலியாகிக் கொண்டிருக்க எங்களின் இடப்பெயர்வு தொடர்ந்தது.

இடம்பெயரும் மக்கள் வழிகளை நிரப்பியிருந்தனர். அவர்கள் செல்லும் பாதையிலும் எறிகணை வீச்சு சரமாரியாகப் பொழியப்படும் போது அவர்கள் அந்த எறிகணையில் தங்களுக்கு எதுவும் நேர்ந்து விடக் கூடாது என நினைத்து வீதிகளில் படுத்துக் கொள்வதைத் தவிர எதையுமே அவர்களால் செய்ய இயலாது. எறிகணையின் சத்தம் சற்றுக் குறைந்ததன் பின்னர் அவர்களின் பயணம் தொடர்ந்தது. இறந்தவர்களை இறந்த இடத்தில் புதைத்து விட்டு நின்று பார்த்து நிம்மதியாய் மூச்சு விட நேரமின்றித்தான் எமது மக்கள் ஒவ்வொரு இடமாக இடம்பெயர்ந்தனர். உந்துருளியில் செல்லும்போது வழியில் இறந்த உடலங்கள், காயப்பட்ட மக்கள், பறந்து வரும் எறிகணைத் துண்டுகள் என அத்தனையையும் எதிர்கொண்டே எங்கள் பயணங்கள் தொடர்ந்தன. பாதுகாப்பு வலயம் என சிறிலங்கா அரசாங்கத்தால் பிரகடனப் படுத்தப்பட்ட பிரதேசங்கள் எறிகணைகளை மாறி மாறி ஏப்பமிட்டுக் கொண்டிருந்தன.

உணவு மட்டுப்படுத்தப்பட்டுக் கொண்டு வந்தது. கடைசியாக திறந்து வைக்கப்பட்டிருந்த சில கடைகளிலும் கூட உணவு வகைகள் எதுவுமே விற்பனைக்கு கிடைக்காத ஒரு நிலையே இருந்தது. அப்போதுதான் சிறிலங்கா அரசாங்கம் மாத்தளன் முள்ளிவாய்க்கால் பகுதியை பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியது. இந்தப் பாதுகாப்பு வலயத்திற்குள் பெப்ரவரி மாதத்தில் இருந்து பல இலட்சம் வரையிலான மக்கள் வந்து சேரத் தொடங்கினர். வன்னி மக்கள் மிகவும் கடினமான உழைப்பாளிகள். தங்கள் வீடுகளுக்கு எதிர்பாராமல் வரும் விருந்தினர்களுக்கு விருந்து வைப்பதற்குப் போதுமான அளவு அரிசியும் உணவும் அவர்கள் வயல்களில் இருந்தே அவர்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய மிகவும் தன்னிறைவான பொருளாதாரத்தைக் கொண்ட மக்கள். அவர்கள், அவை அனைத்தும் விட்டு தங்கள் குடும்பங்களை மட்டும் பாதுகாத்தபடி பல துன்பங்களைத் தாங்கியபடி வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு, உடையார்கட்டு, சுதந்திரபுரம், கைவேலி, புதுக்குடியிருப்பு என இடம்பெயர்ந்து கொண்டிருந்தனர். சுதந்திரபுரம் படுகொலை என்பது 98ம் ஆண்டு மிகவும் கொடூரமான முறையில் தமிழ் மக்கள் மீது சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட ஒரு படுகொலை. அதே சுதந்திரபுரம் மண்ணில் மீண்டும் 2009ஆம் ஆண்டு தை மாதம் ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்ட வளாகத்தில் தங்கியிருந்த மக்கள் பலர் சிறிலங்கா அரசாங்கத்தின் எறிகணைக்குப் பலியாகியிருந்தனர்.

30 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்ட பொக்கணை, மாத்தளன், வலைஞர் மடம், முள்ளிவாய்க்கால் உட்பட்ட அந்தக் கடலோரப் பகுதிக்குள் மூன்றரை இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்திருந்தனர்.



புதுக்குடியிருப்பில் தங்கியிருக்க எண்ணிய சில குடும்பங்களும் இப்போது இடம்பெயரத் தொடங்கியிருந்தனர். வீதிகளில் தெரிந்த நண்பர்கள் குடும்பங்கள் எங்களைக் கண்டு தங்களின் குடும்பத்தில் இறந்தவர்கள், காயமுற்றவர்களின் விபரங்களை வேதனையுடனும் விரக்தியுடனும் பகிர்ந்து கொண்டனர்.

நூற்றுக் கணக்கானவர்களைப் பராமரித்து வந்த புதுக்குடியிருப்பு பொன்னம்பலம் மருத்துவமனையில் வீழ்ந்த எறிகணைகள் மேலும் இழப்புக்களை ஏற்படுத்தி அங்கிருந்த அனைவரையும் கொன்று குவித்தன. பலமுறை குண்டுகள் பட்டு தரைமட்டமாக்கப்பட்டிருந்த அந்த மருத்துவமனையைக் கண்ணால் கண்ட போது கண்ணீர் கட்டுப்பட மறுத்தது. தங்களது குடும்பங்களை பாதுகாப்பாக பதுங்கு குழிக்குள் இருத்திவிட்டு பொருட்களை இறக்கும்போதும் தியாகிகளாகவும் இறந்த குடும்பத்தலைவர்களை அதிகம் பார்த்தபோது தந்தையின் முகம் அறியாத பல குழந்தைகள் எங்கள் மண்ணில் உருவாகி வரும் கொடுமை மனதை உருக்கியது.

ஒருமுறை நாங்கள் தங்கியிருந்த முள்ளிவாய்க்கால் கொட்டகைக்கு அருகில் இருந்த குடும்பத்தில் மூன்று குழந்தைகளும் தாயும் பதுங்குகுழிக்குள் இறந்து கிடக்க அவர்களின் மேல் புற்பாய் ஒன்றைப் போட்டு மூடியிருந்தனர். இறந்து விட்டனர் என்று சொல்லவும் வழி இல்லாமல் குடும்பம் குடும்பமாய் எமது மக்களின் உயிர்கள் குடிக்கப்பட்ட துயர வரலாறு அங்கு தொடர்ச்சியாக அரங்கேறிக் கொண்டிருந்தது.

மார்ச் மாதம் தொடக்கம் அரிசியும் பருப்பும் மட்டுமே மக்களின் அன்றாட உணவாக மாறிப் போனது. அதுவும் தங்களுக்கென தொடர்ச்சியாக சிறிது உணவை சேமித்து வந்தவர்களுக்கு மட்டுமே அது மிஞ்சியது. ஏனையவர்கள் புனர்வாழ்வுக் கழகத்தினால் கொடுக்கப்படும் வழங்கல்கள் மூலம் மட்டுமே தங்கள் அன்றாடப் பசியை ஓரளவேனும் தீர்த்துக்கொண்டனர். எங்களுக்கும் எங்களைச் சுற்றியிருந்தவர்களுக்கும் காயங்களுடன் வேதனைப்பட்டோருக்கும் சிறிதளவேனும் உணவை வழங்குவதில் மட்டுமே எங்களின் கவனம் முழுமையாக மாறியிருந்தது எறிகணை வீச்சுக்கள் மட்டுமல்லாது அந்தக் குறுகிய மக்கள் செறிந்து வாழும் நிலப்பரப்பையும் குறிபார்த்து ஒவ்வொரு நாளும் கிபீர் குண்டு வீச்சு விமானங்களும் கடலில் இருந்து ஏவப்படும் கனொன் எறிகணைகளும் மக்களைத் தொடர்ந்து சிதைத்தபடி இருந்தது.

அவ்வளவு நெருக்கமான வாழ்வு முறைகளிலும் கூடிய வரையில் சுகாதாரத்தைப் பேணுவதில் அனைவரும் மிகுந்த அக்கறை காட்டியதே அதிசயமாக இருந்தது. கழிவிடங்கள் பனைமரக் குற்றிகளாலும் கிணறுகள் பிளாஸ்டிக் பரல்களாலும் மிகவும் நேர்த்தியாகச் செய்யப்பட்டு அளவுடன் பயன்படுத்தப்பட்டு வந்தன.

ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் வெறும் ஆறு சதுர கிலோமீட்டர் பரப்பளவுக்குள் 350,000 மக்கள் தங்கள் அன்றாட வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். எந்த ஒரு நாட்டிலும் இல்லாத ஒரு கொடுமை ஏப்ரல் 19, 20ம் திகதிகளில் அரங்கேறியது. மாத்தளன் பகுதியைப் பிரித்து வலைஞர் மடம் வரையில் இடையில் வெட்டிய இராணுவம் அந்த மக்கள் அனைவரையும் நோக்கி கடல் மற்றும் தரை மூலமாக சரமாரியாகக் குண்டுகளை அள்ளிப் பொழிந்தது. திக்குத் தெரியாமல் இயலுமான திசைக்கு ஓடிச் சென்ற மக்களில் 250,000க்கும் மேற்பட்டவர்களை இராணுவம் தனது கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் கொண்டு சென்று முகாம்களில் அடைத்தது. மிகுதி இருந்த முள்ளிவாய்க்கால் பிரதேசத்துக்குள் ஓடி வந்த மக்களின் வாக்குமூலத்தின்படி குறைந்தது இரண்டாயிரம் மக்கள் அன்று பலியாகியிருக்க வேண்டும்.

ஏப்ரல் 22, 23ம் திகதிகளில் முள்ளிவாய்க்கால் மருத்துவமனையில் தொண்டராக நான் பணியாற்றியபோது ஒவ்வொரு நிமிடமும் புனர்வாழ்வுக் கழக வாகனங்களில் குவிந்தபடி வந்தவை மக்களின் உயிரற்ற உடலங்களா அல்லது காயமுற்றவர்களா என்பதை அவர்கள் ஒவ்வொருவராய் இறக்கிய பின்னரே அறிய முடிந்தது. முதல் நாள் நான் அங்கு சென்றபோது ஒரு பெண் கை முறிந்த நிலையில் இரத்தம் தலையில் சொட்ட படுத்திருந்தார். அவரது மகன் தலையில் கட்டுப் போடப்பட்டு சுய நினைவின்றி எழுந்தபடியும் விழுந்தபடியும் இருந்தார். தொடர்ச்சியாக அங்கு நான் கண்ட இறப்புக்களைப் பார்த்துப் பார்த்து இறப்பு எனக்கு வழக்கமாகிப் போனது. எனது மகனை எப்படியாவது காப்பாற்றுங்கள் என நள்ளிரவில் இறந்த தனது பிள்ளையைத் தூக்கி வந்த தகப்பன், எங்களுடன் கதைத்துக் கொண்டிருந்தார். திடீரென அவர் விழுந்து விட்டார், நெஞ்சில் குண்டு பட்டிருக்க வேண்டும் எப்படியாவது காப்பாற்றுங்கள் எனக் கதறிய நண்பர்கள் அனைவருக்கும் என்ன பதில் சொல்வது எனத் தெரியாமல் நின்ற மருத்துவர்கள். மருத்துவமனையைப் பார்த்தபோது மருத்துவமனை வளாகம் முழுவதும் காயப்பட்ட மக்கள் ஒருபக்கமும் இறந்தவர்கள் ஒருபக்கமும் அடுக்கப்பட்டிருந்தனர். தமிழீழ மருத்துவக் கல்லூரியில் கல்வி கற்ற மூன்று மருத்துவர்களும் மருத்துவமனை வைத்தியர்கள் இருவரும் தொடர்ச்சியாக சிகிச்சை அறைக்குள் எறிகணைத்துண்டுகளையும் துப்பாக்கி ரவைகளையும் மக்களின் உடல்களில் இருந்து எடுத்துக் கொண்டிருந்தனர். சிகிச்சை அறைக்குள் உதவி செய்ய நானும் அங்கு பணிக்கப்பட்டேன். "என்னை எப்படியாவது காப்பாற்றுங்கடா" எனத் தகாத வார்த்தைகளால் கத்தியபடி ஒருவர், நெஞ்சிலும் கண்ணிலும் எறிகணைத்துண்டுகளுடன் வந்து சிகிச்சை படுக்கையில் படுத்தார். ஒரு மருத்துவர் அவரது ஒரு கண்ணை முழுவதுமாக அகற்றி கண்களுக்குத் தையலிட இன்னொருவர் அவருக்கு சுவாசக் குழாயை நுழைக்க எத்தனித்துக் கொண்டிருந்தார். உடல் முழுவதும் மண் நிரம்ப இருந்த அவரின் மயக்க மருந்து இன்னமும் வேலை செய்யத் தொடங்காததால் அவரின் கைகளையும் கால்களையும் அழுத்திப் பிடிக்குமாறு என்னிடம் கூறினர். நானும் அப்படியே செய்து கொண்டிருந்தேன். அவர் மூச்சுத் திணறுவது தெரிந்தது. நான் சைகை காட்ட இன்னொருவர் சுவாச வாயுக் குழாயைப் பொருத்தினார்.

அவர் மூன்று முறை பெருமூச்சு விட்ட பின்னர் உயிர் பிரிந்தது. நான் இன்னமும் அவரின் கையையும் காலையும் பிடித்துக் கொண்டே இருந்தேன். "ஆள் முடிஞ்சுது" என்றார் மருத்துவர். ஓர் உயிர் மதிப்பற்றுப் பிரிந்தது. எத்தனை ஆசைகள், கனவுகள், எண்ணங்கள், புதிய சிந்தனைகள் அங்கு கருகிக் கொண்டிருந்தன என்பதை கண்களை மூடிக் கொண்டு அவர்கள் நம்பிய கடவுள் இவற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தாரோ என்றுதான் எண்ணத் தோன்றியது.

இந்த இடத்தில் லெப்.கேணல் செவ்வானம் பற்றி சொல்லியே ஆக வேண்டும். எறிகணைகள் வீச்சென்று விழவும் துணிச்சலுடன் மே இரண்டாம் திகதி புறப்பட்டு முள்ளிவாய்க்கால் மருத்துவமனைக்குச் சென்ற அவரை வழியனுப்பி வைத்த சில மணி நேரத்திலேயே, மருத்துவமனையில் வீழ்ந்த எறிகணையில் அவரும் அவர் சிகிச்சையளித்துக் கொண்டிருந்த பல நோயாளர்களும் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். இப்போது முள்ளிவாய்க்காலில் இருந்த மிகுதி மக்களுடன் நாங்களும் முள்ளிவாய்க்காலுக்குள்ளேயே நான்கு தடவைகள் இடம்பெயர்ந்து கப்பல் வீதி என அழைக்கப்பட்ட ஜோர்டானிய கப்பல் இருந்த வீதியருகே தங்கியிருந்தோம்.

சேலைத் துணியால் பை போல் தைத்து அதனுள் மண் நிரப்பி உருவாக்கப்பட்ட நிலமேல் பதுங்குகுழிகளும் முள்ளிவாய்க்கால் நிரம்பவும் காணப்பட்டது. மே மாதம் 10ம் திகதி இராணுவம் மேற்கொண்ட எறிகணை வீச்சில் ஒரு பாரிய வெடிச்சத்தத்துடன் தீப்பிழம்புகள் பெரிதாகக் கிளம்பிய வண்ணம் தீப்பந்துகள் எங்களது பதுங்கு குழிகளை நோக்கி வந்தபோதுதான் நான் முதன் முதலில் சாவை நினைத்தேன். இறப்புக்கள் அந்த மக்களுக்கும் எனக்கும் இப்போது பழகிப்போயிருந்தன. அடுத்தது என்ன என்று நாங்கள் அறிய இயலாத நிலை. பதுங்கு குழிக்குள் இருந்தபடி காயப்பட்ட சக தோழிகளுக்கு இயன்றளவு உதவியதும் இடம்மாற்றும்போது கால் இரண்டும் இயலாதவர்களைத் தூக்கிச்செல்ல வேண்டியதும் எமது கடமையாக மாறியது. 15ம் திகதி பிரதேசம் மிகவும் குறுகியிருந்தது. 300 மீட்டருக்குள் இராணுவம். பல்லாயிரக்கணக்கான மக்கள். நான்கு பக்கமிருந்தும் எறிகணை வீச்சு.

15ம் திகதி காலையில் ஒரு தோழி எறிகணைகளைப் பற்றிய கவலைகள் எல்லாவற்றையும் களைந்து வைத்துவிட்டு பதுங்கு குழிக்குள் இருந்த அனைவருக்கும் விறகு அடுப்பு வைத்து தேனீர் கலந்து தந்தாள். பின்னர் மிகவும் விரக்தியுடன் தனது பதுங்கு குழி வாசலில் அமர்ந்திருக்க அவரின் தலையில் எறிகணை வீழ்ந்து சிதறி வெடித்தது. மேலும் இரு தோழிகள் அவ்விடத்திலேயே தங்கள் உயிரை மாய்க்க மேலும் எறிகணைகள் மிக அருகில் வீழ்ந்து வெடிக்க 50 மீட்டர் மீண்டும் இடம்பெயர்ந்தோம். செல்லும் போதெல்லாம் முன்னரணில் இருந்து வந்த ரவைகள் எங்களின் காதுகளுக்கு அருகில் 'கிஸ்' 'கிஸ்' என்று சத்தமிட்டபடியே சென்றன. தலைகளை இயன்றளவு குனிந்தபடி வாகனங்களுக்கு மறைவாக நடந்தபடி மேலும் ஒரு பதுங்குகுழிக்குள் புகுந்து கொண்டோம். 15ம் திகதி இரவு 12 மணி போல் மேலும் ஒரு எறிகணை அருகில் வீழ்ந்ததில் தோழிகள் இருவருக்கு காயம் ஏற்பட்டது. ஒரு தாய் வயிற்றில் காயத்தோடு கத்தினாள் "என்னைப் பாக்காதீங்க பிள்ளைகள். நான் சாகப்போறன். நீங்க போங்க", "அம்மா சும்மா இருங்கம்மா அப்படிக் கதைக்காதீங்க" என்ற குரல்கள் எங்களது கொட்டகைக்கு வெளியில் கேட்டுக் கொண்டிருக்க என்னுடன் இருந்து காயப்பட்டு முகத்தில் இரத்தம் வழிந்தபடி இருந்த தோழிக்கு கட்டுப் போட்டுக் கொண்டிருந்தேன். வெளிச்சத்தை ஏற்படுத்திப் பார்க்கக் கூட இயலாத நிலை. வெளிச்சம் வரும் இடங்களுக்கு மேலே சுற்றிக் கொண்டிருக்கும் வேவு விமானம் எறிகணைகளைப் போடும்படி கட்டளையிடும். அங்கும் இருக்க முடியாத நிலை. மேலும் சிறிது தூரம் நடக்க எண்ணி நடந்தபோது திரும்பக் கூட இயலாத மக்கள் கூட்டத்தோடு இணைந்திருந்தோம்.

வழி நெடுகிலும் உயிரற்றதா உயிருள்ளதா எனத் தெரியாத நிலையில் மனிதர்கள். அழைத்துச் செல்ல சொந்தங்கள் எதுவுமின்றி உணர்வற்ற நிலையில் மக்கள் அடுக்கப்பட்டுக் கிடந்தனர். 16ம் திகதி முள்ளிவாய்க்கால் முடிவில் அடுக்கி வைத்திருந்த பேருந்துகளின் கீழ் படுத்திருந்த உயிர்களைப் பாதுகாத்தபடி எங்கு செல்கின்றோம் என்பதைக் கூட அறியாமல் அங்கிருந்து நகர்கிறோம். மூன்று மாதங்களாகக் கஞ்சியை மட்டுமே உணவாக அருந்திக் களைத்துப் போயிருந்த கால்கள் நகர மறுத்தன. இறப்புக்களைப் பார்த்து அலுத்துப் போன மனம் வெறும் பிணம் போன்ற உணர்வைத் தந்தது. எத்தனை பேர் இறந்தார்கள்? எத்தனை பேர் இராணுவத்தின் வதைக்கு உட்படுத்தப்பட்டனர்? எத்தனை ஆன்மாக்கள் அலைந்தோடித் திரிகின்றன? இவற்றையெல்லாம் எப்படி ஈடுகட்டப் போகின்றோம்? நந்திக் கடலில் மிதக்கும் உடலங்கள் தெரிய வட்டுவாகல் கடந்து பல கிலோ மீட்டர்கள் நடந்தோம். கால் வைத்து நடக்க இயலாத அளவு மக்கள் நெரிசல். தங்களால் இயன்ற அனைத்து சக்திகளையும் ஒன்று திரட்டி நடந்து கொண்டிருந்தனர். இரு கால்களை இழந்த ஒருவர் தனது கைகளால் வட்டுவாகல் பாலத்தில் இழுத்து இழுத்து முன்னே வந்தது எனக்கு இன்னமும் கண்முன்னே நிழலாடுகின்றது. இடையிடையே ஆயுதம் ஏந்திய படையினர். "போங்க போங்க உங்களுக்கு நல்ல வாழ்க்கை இருக்கு" நக்கலாகச் சொல்வது போலக் கூறினார்கள் இராணுவச் சிப்பாய்கள். கடந்த மாதங்களில் இராணுவத்திடம் சரணடைந்த பல பெண்களை உடைகளைக் களையச் செய்து அவமானப்படுத்தியதோடு அவர்களை பாலியல் வல்லுறவுக்கும் உட்படுத்தியதாகவும் முன்னரணில் நின்றபோது நேரடியாகப் பார்த்த ஒரு தோழி என்னிடம் கூறியிருந்தார். அந்த எண்ணங்கள் எங்கள் மனதில் ஓடிக் கொண்டிருக்க எமது அவலநிலையை எண்ணியபடி நகர்ந்தோம். காயமுற்ற கணவனைத் தூக்கியபடி சென்ற மனைவி, குடும்பங்கள், கால்களை இழந்தபடி ஒரு தடியின் உதவியுடன் நகர்ந்த பெண்கள் என அனைவரும் எங்களுடன் நகர்ந்து கொண்டிருந்



“ வழி நெடுகிலும் உயிரற்றதா உயிருள்ளதா எனத் தெரியாத நிலையில் மனிதர்கள். அழைத்துச் செல்ல சொந்தங்கள் எதுவுமின்றி உணர்வற்ற நிலையில் மக்கள் அடுக்கப்பட்டுக் கிடந்தனர். ”

தொடர்தல் 76ம் பக்கம்

# ஒரு மூன்றாவது...

71ம் பக்கத் தொடர்ச்சி...

பலாப்பழம் வாங்கிக் கொண்டிருந்தேன். யாதும் நடக்காதது போல. ஆனால் நடைப் பிணங்களாய் வெள்ளவத்தைத் தமிழர் நடமாடினர். ஆனாலும் சந்தை களைகட்டியிருந்தது. தீடிரென நான்கு பக்கங்களிலுமிருந்து சைரன்கள் ஊத, பெருமளவிலான கனரக வாகனங்கள், கறுப்புக் கண்ணாடிக்குள் மறைந்து கொண்டு களவாகக் செல்லும் 'கறுப்பு மனிதர்களின்' வாகனத் தொடர்கள் என நகரமே அல்லோல கல்லோலப்பட்டது. எல்லோரது முகங்களிலும் கேள்விக் குறிகள். வாய் விட்டுச் பேச யாருக்கும் தைரியமில்லை. முகங்களும் மனங்களும் மட்டுமே பேசிக் கொண்டன. கணப்பொழுது தான். ஒருமித்து எழுந்த வெடிகளுடன் 'ஜயவேவா' கோசமும் காதுகளை அதிர வைத்தன. வெள்ளவத்தைத் தமிழர் பேயறைந்தவர்களாய் வெளிறிப் போயினர். நின்ற இடத்திற்கும் 'விசளம்' சொல்லாது நழுவிப் போயினர் 'இனி யாது நிகழும்' எனப்பயந்து. ஒன்று மட்டும் உறுதியாயிற்று. ஒரு சமூகம் 'மாண்டு மண்டியிட்டுள்ளது, கொன்றழிக்கப்பட்டு வெற்றி கொள்ளப்பட்டுள்ளது ஒட்டு மொத்தமாய். அதன் சடலத்தின் மீது துப்பாக்கியை ஊன்றியபடி, இலங்கையரசின் போர்வீரன் இறுமாப்புடன் கையசைக்கின்றான். அவ்வளவு தான்.

முள்ளிவாய்க்கால் மாபெரும் நரபலிச் செய்தியை எல்லா ஊடகங்களும் இடித்துரைக்கின்றன ஒரே முழக்கமாய். கையில் பலாப் பழத்துடன் விலைபேசி நின்ற என்னிடம் 'சென்று உன் பிரபாகரனிடம் கேள்' என்கிறான் கடைக்காரன். இவ்வளவு நாட்களாய், "மேடம், கொஹமத? அத ஹொந்த கெடியக் கபுவா.. மென்ன.. மே தீறுவக்.. மேடம்டமய் தியாகத்தா வாகே" என்றெல்லாம் வரவேற்பவன். இப்போது அவன் குரலில் அதிகாரமும் திமிரும் தொனித்தன. அந்நியப்பட்டுப் போய் அதிர்ச்சியுடன் அவ்விடத்திலிருந்து அகன்றேன் நான். 'நான் யார்' என்ற கேள்வி மட்டுமே இன்று வரைக்கும் என்னுள் எஞ்சி நிற்கின்றது. முடிந்து போன உயிர்களின் மொத்த மனிதமும் என்னை கேட்டன இக் கேள்வியை. இற்றை வரை உழல்கின்றேன் 'நான்'.

**மார்ச் 22, 2012**

ஏறக்குறைய மூன்றாண்டுகளின் பின், 'kettling' பற்றிய ஒரு விவாதம் எங்களது கனடியப் பயிற்சியறைக்குள் நிகழ்ந்து கொண்டிருந்தது. G20இன் போது ரொரன்ரோவில் இடம் பெற்ற காவற்றுறை அடாவடி நடவடிக்கை (கனடாவில் kettling, இலங்கையில், roundup - சுற்றிவளைப்பு) பற்றிய விவாதம் அது. எங்கள் நாட்டில் தெருத்தெருவாய் சுற்றி வளைத்தார்கள். வளைத்தெடுத்த கரைவலை மீன்களைப் போல் இளசுகளை கூட்டில் அடைத்தார்கள் அல்லது கொன்று குவித்தார்கள். ஊர் ஊராய், கிராமம் கிராமமாய், கிழக்கின் மூலைகளிலும் வடமுனை முழுவதற்குமாய் இது வியாபித்தது. 375,000 பேரை, 2 கிலோ மீற்றர் இரு பக்கம் கடல் நீர் சூழ்ந்த மணற்றிட்டிற்குள் நெருக்கியடைத்தனர். வானிலிருந்தும் மண்ணில் இருந்தும் தாக்கி அழித்தனர். மீதமிருந்ததை மிதித்துக் கொன்றனர். இவை எமது வாழ்வின் பகுதியாகி பல தசாப்தங்கள் நிகழ்ந்தவை, ஓரிரு நாள் இடைவெளிக்குள் முழுச் சமூகத்திற்கும் நிகழ்ந்த இப்பாரிய சுற்றிவளைப்பு பற்றிய எனது அனுபவத்தை நான் இக்கலந்துரையாடலுக்குள் இணைத்துக்கொண்டேன். ஏறக்குறைய 15 நாடுகளைச் சேர்ந்தவர்கள் "இது போன்ற கொடுமையை கேட்டதில்லை" என்றனர். எனது இந்திய – கனடிய நண்பி என்னை இறுதியாகக் கேட்ட கேள்வி இதுதான். சுற்றிவளைத்தது LTTE யா? என்பது தான். அது மட்டுமன்றி 'யார் LTTE' என்று கேட்ட எனது ஏனைய நாட்டு நண்பர்களுக்கும், எனது பதிலை எதிர்பார்க்காமலேயே விளக்கமளித்துக் கொண்டிருந்தார். அவரைக் குறுக்கீடு செய்து 'இல்லை, அரசுதான்' என்று பதிலளித்தவாறு நான் எழுந்து நடந்து வெளியில் வந்தேன். பனிப்புகாருக்குள் பாதைகள் மறைந்தே இருந்தன. எனக்குரிய பணிகளும் அவ்வாறுதான்.

நான் பேச நினைப்பது அரசியல் என்று அலட்சியம் செய்யாதீர்கள். இது மனிதம் பற்றியது, அதன் அவலம் பற்றியது, அதன் வாழ்தல் பற்றியது, அதன் சாதலும் பற்றியது.





zulfika.ismail@thaiveedu.com

# முள்ளிவாய்க்கால்... இன அழிப்பின்...

70ம் பக்கத் தொடர்ச்சி...

சுதந்திரம் கிடைப்பது வரை அதை நிறுத்தவே கூடாது என்பது தான் அவை.

இலங்கை நாட்டில் புத்தர் ஞானோதயம் அடைந்த 2600வது வருடத்தை குதூகலமாகக் கொண்டாடுவர். ஆனால் இந்த வருடம் மே 18 ஆம் தேதி தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதும் அன்றைய தினம் நினைவில் வரும் என்பது அபத்தமான விஷயமாகும்.

பூமியில் உள்ள அனைத்து உயிரினங்கள் மீதும் அன்பையும், இரக்கத்தையும் கருணையையும் பொழிந்தவர் புத்தர். அவருடைய போதனைகள் பல அரசியல் சாம்ராஜ்யங்களை மாற்றியமைத்தன. பல ஆசிய நாடுகளை ஒருங்கிணைத்தன. நீதி நியாயத்தைத் தழைக்கச் செய்தன. புத்த பிரானின் வழி நடக்கும் இலங்கை நாடு, வன்னியில் கொலை செய்யப்பட்ட தங்கள் அன்பானவர்களின் நினைவாக தமிழர்கள் ஒரு மெழுகு வர்த்தியை கொளுத்தி கண்ணீர் அஞ்சலி செலுத்தக்கூட அனுமதிதரவில்லை.

ஒவ்வொரு மனிதனுக்கும் இழைக்கப்பட்ட அநீதி இது. மனித இனத்துக்கே இது பெரும் வெட்கக்கேடு. நமது தார்மீக மற்றும் மத ரீதியான உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. புத்த பிரானின் போதனைகளுக்கு முற்றிலும் இது எதிரானது.

தமிழர்கள் மீது இலங்கை அரசின் இந்த கொடுங்கோன்மையான அடக்கு முறையை அனுமதித்தால், சிங்கள சமுதாயம் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்தது போலாகிவிடும். தமிழர்களைச் சிறையில் அடைப்பதன் மூலம் சிங்களவர்கள் தங்களுக்கே அடிமைச் சங்கிலிகளைப் பூட்டிக் கொள்கிறார்கள். அவர்கள் கேளாக்காதுடனும் பாராமுகத்துடனும் பேசாவாயுடனும் இருக்கக்கூடாது.

கடைசி மூச்சு இருக்கும்வரை தங்கள் சுதந்திரமான வாழ்க்கைக்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொண்ட நம் ஆயிரக்கணக்கிலான தமிழ் சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்கு இன்றைய நாளில் நம் கண்ணீர் அஞ்சலியை செலுத்துவதுடன் மட்டுமன்றி, அவர்களின் வீரதீரச் செயலை நம் வாழ்நாள் முழுவதும் வாழ்த்திப் போற்றுவோம்.

அவர்களுடைய வீரமரணத்தை ஓர் ஊன்றுகோலாக எடுத்துக்கொண்டு, நீதியை நோக்கிப் பயணித்து, வெற்றி மற்றும் சுதந்திரத்தைப் பரிசாக அடைவோம்.

■ ■ ■

75ம் பக்கத் தொடர்ச்சி...

தனர். ஒரு கிலோமீட்டர் சதுரப் பரப்பளவு கொண்டு நான்கு பக்கமும் சுருள் கம்பிபிட்ட வெட்டைக்குள் நாங்கள் அடைக்கப்பட்டோம். நாக்கு வரண்டிருந்தது. தண்ணீரைத் தேடி அலைந்தது. ஒலிபெருக்கியில் போராளிகளையும் பொறுப்பாளர்களையும் சரணடையுமாறும் அப்படி இல்லாவிடின் அவர்கள் உயிருக்கு ஆபத்து உள்ளதாகவும் கூற வணபிதா ஜோசப் அவர்களின் தலைமையில் குடும்பம் குடும்பமாக போராளிகள் தங்கள் குழந்தைகளுடனும் இராணுவத்திடம் சரணடைந்தனர். வணபிதா ஜோசப் அடிகளாரும் இல்லை அவர்களுடன் அந்தத் தருணத்தில் சரணடைந்த அனைத்துப் போராளிகளும் இன்று இல்லை.

நான் மூன்று நாட்களாக உணவு ஏதுமற்ற நிலையில் காயப்பட்ட ஒரு தோழியுடன் மறுநாள் காலை எமது முல்லைத்தீவு மண்ணிடம் விடைபெற்றுக் கொண்டேன். என்றோ ஒரு நாள் மீண்டும் அங்கு செல்வோம். எமது மக்களின் இரத்தம் தோய்ந்த மண் அந்த மண். அதை எதைக் கொண்டு மூடி மறைத்தாலும் அந்த வடுக்கள் எங்கள் மனதில் ஆறாதவை. அந்த அனுபவத்தை வார்த்தைகளால் கூறிவிட இயலாது. இன்றும் முள்ளிவாய்க்காலில் இருந்த அந்த ஆயிரக்கணக்கான மக்களில் எவரையேனும் நான் பார்த்தால் எனது குடும்பத்தவரைப் பார்ப்பது போன்ற உணர்வு என்னை ஆக்கிரமிக்கும். வெளியில் இருந்து அறிய முடியாத ஒரு வேதனை.

நான் இப்போது பாதுகாப்பாக இருக்கின்றேன். என்னைப் போன்று பாதுகாப்பான வாழ்க்கையும் தங்கள் உணர்வுகளை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ளும் சுதந்திரத்தையும் அனைவருக்கும் வழங்குவதற்கு நாம் அனைவரும் உழைக்க வேண்டும். இன்று எமது மக்களின் போராட்டத்தை வழிநடத்தத் தவறும் ஒற்றுமையின்மையை இங்கு பார்க்கும்போது நிச்சயமாய் மனம் வெறுமையடைகிறது.

**● சுடரினி 2009 மே 17 வரை முள்ளிவாய்க்காலிலும், அதற்கு முன்பும் நடந்த இனப்படுகொலைகளை நேரில் கண்டவர். தன் அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொள்கிறார். அவரதும், அவரின் நேரடி உறவினர்களினதும் பாதுகாப்புக் கருதி அவர் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.**

■ ■ ■

**முள்ளிவாய்க்கால் தீயுண்டநிலம்**

# மெனிக் ஃபாம் ஊடாக புதுக்குடியிருப்பிலிருந்து புதுக்குடியிருப்பு



'அம்பாறை மாவட்டத்தில் குடியேற்றப்பட்ட சிங்களக் காடையர்கள் தமிழர்களுக்கெதிரான வன்முறைகளில் ஈடுபட்டார்கள். இதில் இங்கினியாகலை என்ற இடத்திலிருந்த கல்லோயா ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான கரும்புத் தொழிற்சாலையில் வேலை செய்து வந்த 150 தமிழ்த் தொழிலாளர்கள் அதே தொழிற்சாலையில் வேலை செய்த சிங்களத் தொழிலாளர்களால் தாக்கப்பட்டனர். பலர் கூரிய ஆயுதங்களால் வெட்டப்பட்டுக் கொல்லப்பட்டனர். அரைகுறை உயிருடன் இருந்தவர்களும் இறந்தவர்களும் எரியும் தீயில் தூக்கி வீசப்பட்டார்கள். இங்கு நடைபெற்ற படுகொலையே இங்கினியாகலை இனப்படுகொலையென வர்ணிக்கப்படுகின்றது. இதுவே இலங்கை வரலாற்றில் முதன்முதலில் பெருந்தொகையாகத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவமாகும்' என்று வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் (NESOHR) தொகுத்த 'தமிழினப் படுகொலைகள் - 1956 - 2008' (மனிதம் வெளியீடு) என்ற நூல் கூறுகிறது.

இப்படுகொலைகள் ஜுன் 5, 1956இல் நடைபெற்றன. அன்றிலிருந்து காலத்துக்குக் காலம் படுகொலைகள் தொடர்ந்த வண்ணமேயுள்ளன. மே 2009இல் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த பேரழிவோடு தமிழ் மக்கள் கொல்லப்படுவது நின்றுவிட்டது என்று சொல்வோமாயின் அல்லது நம்புவோமாயின், எம்மைவிடக் கிணற்றுத் தவளைகள் யாருமிலர்.

இந்நிலையில் ஈழவிடுதலைப் போராட்டத்தில் 'முள்ளிவாய்க்கால்' என்ற பேரழிவு அத்தியாயம் முடிவடைந்து மூன்றாண்டுகள் நிறைவடையும் இக்காலகட்டத்தில் இறுதிக்கட்டப் போரில் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கு வணக்கம் செலுத்தக்கூட நீயா? நானா? எனப் போட்டா போட்டி நிகழ்வதையும் வேதனையோடு பார்த்துக்கொண்டு, இறுதிப்போரின் போது ஒரு குடும்பம் பட்ட பாட்டைப் பதிவு செய்கிறோம் - குடும்பத் தலைவனின் சொற்களில்.

எங்கள் ஊர் புதுக்குடியிருப்பு, வாழ்வாதாரத்துக்கென இருந்த தொழில் மூலம் பெரிய குறைகள் என்று ஏதுமில்லாத, அமைதியான வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தோம். 2008 இன் பிற்பாதியிலிருந்து போர் தீவிரமடைய வன்னியின் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி மக்கள் இடப்பெயர்ந்த வண்ணமிருந்தனர். 2009 தொடக்கத்தில் புதுக்குடியிருப்பை இராணுவம் நெருங்க நெருங்க இப்பகுதிக்கு இடம்பெயரும் மக்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. புதுக்குடியிருப்புக்கு வந்து விழும் ஷெல்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது. அதனால் மரணங்களும் அதிகரித்தன. எனவே பதுங்கு குழிகளுக்குள்ளேதான் எமது முழுநேரத்தையும் கழித்தோம். உணவு தண்ணீர், இயற்கை உபாதைகள் என்பவற்றுக்காக மட்டுமே வெளியே வந்தோம். சமைப்பதற்கு உணவுப் பொருட்கள் கிடைக்காமையினால் சமையல் இல்லை. ஏதாவது கிடைத்து, சமைத்தாலும் ஷெல்லுக்குத் தப்புவது கடினம். சமைத்த உணவு வழங்கப்படுமிடங்களில் வரிசையில் காத்து நின்று உணவைப் பெற்று அரைவயிறோ கால்வயிறோ நிறைத்தோம். குழந்தைகள், சிறுவர்கள் சத்துணவின்மையால் நலிந்து போனார்கள். இராணுவம் புதுக்குடியிருப்பை நெருங்கிவர ஜனவரி 22ம் நாள் எமது வீட்டிலிருந்து இரணைப்பாலைக்கு இடம் பெயர்ந்தோம்.

உடுத்த உடையோடு மாற்றுடையொன்று... இவைதான் பிறந்து, வளர்ந்து, விளையாடி, குடித்து, உண்டு, உறங்கி மகிழ்ந்திருந்த எம் மண்ணைவிட்டுப் புறப்படும்போது எம்வசமிருந்தன. கைகாவலாக தறப்பாள் (Tarpaulin) ஒன்றும் இருந்தது. இனி சில மாதங்களுக்கு அதுதான் எமக்குக் கூரையென்று அப்போது எமக்குத் தெரிந்திருக்கவில்லை. வழிநெடுக நாம் கண்ட காட்சிகள் வாழ்வில் எம் மனதைவிட்டு அகலா. தெருவோரங்களில் காயம்பட்டவர்கள் பலர் கிடந்து அழுது புலம்பிக் கொண்டிருந்தனர். பல இடங்களில் அவர்களின் உறவினர்களும் அருகே அழுதுகொண்டிருந்தனர். உதவிகேட்டு அழுவோருக்கு உதவ மனமிருந்தும் உயிர்ப் பயம் மேலிட, எல்லோருமே தொடர்ந்து நடந்தனர். உயிரிழந்தவர்களை அடக்கம் செய்யக்கூட முடியாமல் அந்தந்த இடங்களிலேயே விட்டுவிட்டு உறவினர்களை வலுக்கட்டாயமாக இழுத்து வரவேண்டியுமிருந்தது. ஒவ்வொரு நாளும் 150 பேர் வரையில் ஷெல்லுக்குப் பலியாகிக்கொண்டிருந்தனர்.

இரணைப்பாலையிருந்த போது, புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் ஷெல் விழுந்து பணியாளர்களும் நோயாளிகளும் கொல்லப்பட்டதாக அறிந்தோம்.

படையினர் நெருங்கிவர இரணைப்பாலையிலிலும் உயிரிழப்புக்கள் அதிகரித்தன. எங்கிருந்து ஷெல் வரவில்லையோ அத்திசை நோக்கி நடந்தோம். பெப்பிரவரி 22இல் இரணைப்பாலையிலிருந்து புறப்பட்டு முள்ளிவாய்க்காலுக்கு வந்து சேர்ந்தோம்.

முள்ளிவாய்க்காலில், கைவசம் கொண்டு வந்திருந்த தறப்பாளைக் கொண்டு ஒரு கூடாரம் அமைத்தோம். கூடாரம் அமைக்கத் தடிகளுக்கும் தட்டுப்பாடு. நெருக்கமாக அடுத்தடுத்த வரிசையாகக் கூடாரங்கள் அமைக்கப்பட்டன. இருபுறமும் கடல் சூழ்ந்த ஈரலிப்பான நிலமென்பதால் பதுங்குகுழியும் வெட்டமுடியவில்லை. ஷெல் விழுந்தால் அதிக உயிரிழப்பு நிச்சயம். பசி, தாகம், களைப்பு, உயிர்ப்பயம் என்பவற்றோடு எங்கள் நாட்கள் யுகங்களாகக் கழிந்தன. இராணுவத்தினர் சுற்றிவளைத்து நெருங்கிவர ஷெல் தாக்குதலும் துப்பாக்கிச் சூடும் மூர்க்கத்தனமாக நிகழ்ந்தன. எங்கும் உயிரிழப்புக்கள், மரண ஓலம். நிலமெங்கும் இரத்தமும் சதைத் துண்டங்களும் சிதறிக் கிடந்தன. எல்லோர் முகத்திலும் மரணபயம் அப்பியிருந்தது. மே மாதம் 17ம் நாள் நள்ளிரவு 12 மணிக்கு நடக்கத் தொடங்கினோம். இம்முறை எங்கிருந்து ஷெல் வந்ததோ அத்திசை நோக்கி... தென்திசை நோக்கி.

காயம்பட்டவர்கள் நடக்கமுடியாமல் விழுந்து உதவிகோரி அழுது அரற்றிக்கொண்டிருந்தனர்.

**- கந்தசாமி கங்காதரன் -**

ஷெல் வெடிக்கும் சத்தத்தையும் அடிக்கடி கேட்ட துப்பாக்கிச் சத்தத்தையும் மீறி அழுகையும் அவலக்குரல்களும் மனதை உலுக்கின. வழியெங்கும் பரந்து கிடந்த இறந்தோரின் உடலங்களைத் தாண்டிக் கடந்தும் தொடர்ந்து நடக்க மரணபயம் உந்தித் தள்ளியது.

மெது மெதுவாக நடந்தோம்... நடந்தோம்... நடந்தோம்!

காலை ஏழு மணியளவில் பாலத்துக்கு மறுபுறம் வட்டுவாகலில் இராணுவத்தினர் எங்களை எதிர்கொண்டனர். மே 20ம் நாள் மெனிக் ஃபார்ம் முகாமுக்குக் கொண்டுவரப்பட்டோம். பிறகு முகாமிலிருந்து வெளியேறி உறவினர்களோடு வவுனியாவில் சிறிது காலம் இருந்துவிட்டு 2011 நடுப்பகுதியில் எமது வீட்டுக்கு வந்தோம். எமது வாழ்வாதாரத்துக்காக இருந்த ஒரு துரும்புகூட இல்லாமல் போயிருந்தது. இப்போதும் எனக்

தொடர்தல் 79ம் பக்கம்

மே 18ம் நாள் வன்னியில் ஆயுதப் போரின் முடிவைக் குறித்தது. கற்பனை செய்துகூடப் பார்க்க முடியாத அளவிலான மனித நேய அவலத்தில் இறுதி நாட்கள் முடிவடைந்தன என அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம் குறிப்பிட்டது.

மே 16 – 19ம் நாட்களுக்கிடையே வலயத்தில் எஞ்சியிருந்த பொதுமக்கள் கரையோரப் பகுதியிலிருந்து தெற்கே வட்டுவாய்க்கால் பாலத்தைக் கடந்து அரச கட்டுப்பாட்டுப் பகுதியை நோக்கிச் சென்றனர்.

*இலங்கையில் போர்க்குற்றங்கள்: ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை (தமிழில் - மனிதம் வெளியீடு)*

இறுதிப்போரின் பேரவலங்களின் சாட்சிகள் பலர் கொல்லப்பட்டுவிட்டனர். வேறு பலர் சிறைகளுக்குள். இன்னும் சிலர் பேரவலம் நிகழ்ந்த மண்ணிலிருந்து புலம் பெயர்ந்துவிட்டனர். ஆனால் இந்தக் குடும்பத்தலைவன் பேரவலங்களின் சாட்சியாக அந்த மண்ணிலேயே வாழ்ந்துகொண்டிருக்கும் மௌன சாட்சி. இவரைப்போலவே அங்கு வாழ்ந்துகொண்டிருக்கும் ஒவ்வொருவருக்குள்ளும் குறைந்தது ஒவ்வொரு துயர் சுமந்த கதை இருக்கின்றது.

முள்ளிவாய்க்கால் **தீயுண்டநிலம்**

# மூன்றாம் முள்ளிவாய்க்கால்



ஓவியம்: K.K.Rajah

மே மாதத்தில் எனது பிறந்த தினம் வந்தாலும் இப்பொழுதெல்லாம் மே மாதம் அவ்வளவு விருப்பத்திற்குரியதாக இல்லை. ஒரு துர்ச்சகுனமான மாதமாகவே இருக்கிறது.

பிரபாகரனின் முப்பது வருட ஆயுதப் போராட்டத்தை மகிந்த ராஜபக்ச மிகவும் மூர்க்கத் தனமாக அழித்து விட்டார். இவ்வளவு வேகமாக அவர் அழிப்பார் என்று பிரபாகரனே நினைத்திருக்க மாட்டார்.

அதனோடு தமிழர் வாழ்வும் கிட்டத்தட்ட அழிந்த வாழ்வாகவே தெரிகிறது. பிரபாகரனின் கட்டுப்பாட்டில் இருந்த தமிழ் மக்கள் எல்லோரையும் இன்னும் மகிந்த ராஜபக்ச வெறுப்பான பார்வையே பார்க்கிறார். அத்தோடு தனது அரசியல் வெற்றிக்கு தமிழர்கள் தேவையில்லை என்றே அவர் நினைக்கிறார்.

'ஆயுதக் குழுவுக்கு, போராட்டத்தின் நடுவில் இருக்கும்பொழுது அந்த மக்கள் என்ன எதிர்ப்பை காட்டியிருக்கமுடியும்?' என்ற அடிப் படையை கூட அவர் விளங்க முடியாதவ ராக இருக்கிறார். அல்லது அவர் விளங்க மாட்டாதவராக இருக்கிறார்.

ஆமியின் கட்டுப்பாட்டுக்குள் எப்படி மக்கள் இருந்தார்களோ அதே மாதிரித்தான் முதலும் கட்டுப்பாட்டுக்குள் இருந்தார்கள். அங்கிங்கு அசைய முடியாதபடிக்கு அவர்கள் வைக்கப் பட்டிருந்தார்கள்.

இப்பொழுது யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங்களாகி விட்டபின்னும் மக்களை அபி விருத்தி அடைய செய்ய முடியாத இக்கட் டான நிலைமைக்குள் மக்கள் தள்ளப்பட் டுள்ளார்கள். அரசு இன்னும் மனம் வைப்ப தாயில்லை. அரச சார்பற்ற நிறுவனங்களை விட்டாலே மக்களுக்கு ஓரளவு விமோசனம் கிடைக்கும்.

வன்னிக்குள் மக்கள் வாழுகிறார்கள். ஆனால் ஒவ்வோர் இராணுவக் கண்ணும் அவர்க ளைத் தொடர்ந்து கொண்டே இருக்கின்ற அபாயம் தெரிகிறது.

மூன்று வருடங்களாகியும் கண்ணிவெடிகள் இன்னும் அகற்றப்படவில்லை. நிவாரணப் பணம் முழுமையாக கிடைக்கவில்லை. அவர் களின் காணிகள் அவர்களிடம் கொடுக்கப் படவில்லை. இன்னும் முகாம் வாழ்க்கை முடிந்தபாடாக இல்லை.

துவக்குகளின் கீழே வாழ்ந்த மக்கள் இன் னும் துவக்குகளின் கீழேதான் வாழ வைக் கப்பட்டிருக்கிறார்கள். இப்பொழுதும் அவர்க ளுக்கு அகதி வாழ்க்கையும் அந்தரப்பாய்ச் சலும்தான்.

பிரேதங்களுக்கு நடுவே வாழ்ந்த வாழ்க் கையை மறக்க முடியாமல் இன்னும் எத்த னையோ தமிழர்கள் நித்திரை இல்லாமல் இருக்கிறார்கள்.

"இனிமேலும் எங்கடை ஊரிலை போய் வாழ முடியுமோ" என்று ஒரு முதியவர் என்னிடம் கேட்டார். அவர் கேட்டது லண்டனில் வைத்து.

தமது பூமியில் வாழவேண்டும் என்ற அவா வில் கேட்கின்ற குரலாகவே அவரின் குரல் இருந்தது.

வன்னி நிலம் செல்வச்செழிப்போடு வாழ்ந்த அதன் மக்கள் அரைவாசிக்கும் மேற்பட்ட வர்களை பிணமாக்கி ஓய்ந்து போன யுத்தத் திற்கு பிறகும் நிம்மதி இழந்த வாழ்வுதான் பெருங்கவலை.

மனம் திறந்த பேச்சுவார்த்தைக்கோ மக்க ளின் தீர்வுக்கோ அசையாமல் இருக்கிறார் மகிந்த ராஜபக்ச.

தமிழ் மக்களை இப்பொழுது சிறுபான்மை இனமாக்கி அதற்கு பிறகு பூமி புத்திரர்களை வாழவைத்து அழகு பார்த்துக்கொண்டிருப்பது ஒரு தேசிய இனத்துக்குச் செய்யும் பெரும் துன்பமாக அரசு கருதுகிறது இல்லை. இன் னும் என்ன பாவம் செய்தனர் தமிழ் மக்கள்?

"புலிகளோடு பேசமுடியாது; அவர்கள் ஆயுதம் வைத்திருக்கிறார்கள்" என்றார்கள். புலிகள் இல்லை. மூன்று வருடமாகியும் அசைகிறார் களில்லை. பேரம் பேசும் சக்தி இல்லாவிட் டால் கொடுக்க வேண்டிய தேவை இல்லை யென்றுதான் நினைக்கின்றன சிங்கள அரசுகள்.

உயிர், உடமைகள், வாழ்வு, இளமை எல்லா வற்றையும் தமிழர் போராட்டத்துக்கு விரும் பியோ விரும்பாமலோ கொடுத்த மக்கள் இன்று போக்கிடம் இல்லாமல் இருக்கின்ற னர். பெரும் அழிவு இது.

"தமிழ் மக்களுக்கு எல்லாம் கிடைக்குது; அரசியல் உரிமை தேவையில்லை" என்று சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் பத்திரிகை யாளர்களைக் கூப்பிட்டு கூட்டம் போட்டுச் சொல்கிறார்கள். அந்த மக்களுக்கான உரி மைகள் என்ன?

'தமிழ் மக்கள் இலங்கை தேசத்தின் மக்கள் தானா?' என்ற கேள்வி எழுகிறது.

முன்னைய புலிகளுக்குப் புனர்வாழ்வளித்து விட்டோம் என்று சொல்கிறார்கள். ஆனால் புலிகளில் இருந்து விட்ட ஒரே காரணத் துக்காக அவர்களை ஏனைய தமிழ் மக்கள் ஒதுக்கி வைககிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு, வாழ்வு, திருமணம் எல் லாம் மறுக்கப்படுகின்றன. பயப்படுகின்றனர். இன்னும் கண்ணுக்கு முன்னால் கண்ட மர ணங்களை மறக்க முடியாமல் மனம் பேத லித்து போய் இருக்கின்றனர் மக்கள்.

கொழும்பில் இருந்து வருகின்றனர்; புலனாய்வு பிரிவு என்கின்றனர்; கைது செய்து அழைத்து போகின்றனர்; போகிற தமிழர்கள் பின்னர் காணாமல் போய் விடுகின்றனர். யாழ்ப்பா ணத்தின் நிலைமை இதுதான்.

"பேசினால்... எழுதினால்... மூச்சு விட்டால்... கையைக் காட்டினால்... மரணம் என்ற நிலை யில் என்ன செய்வது? வாழ்வை இவ்வளவு

- இளைய அப்துல்லாஹ் -

கஸ்டப்பட்டு வாழ வேண்டுமா?' என்ற கேள் வியை யாழ்ப்பாணத்திலிருந்து ஓர் எழுத்தாள நண்பர் என்னிடம் கேட்டார்.

கண்ணுக்கு முன்னால் செத்துப்போன... அழிந்து போன... நான் பிறந்த வன்னி நிலம் இன்னும் நிழலாடிக்கொண்டே இருக்கிறது. எங்கே போய் யாரிடம் இதற்கெல்லாம் வந்தி கேட் பது? சிதைத்து அழிக்கப்பட்ட வீடுகள், வயல் நிலங்கள், எங்கள் தோட்டம் துரவுகள், வாழ் விடங்கள், கருகிப்போன உடல்கள், முண் டங்கள், பங்கருக்குள் எரிந்து போன பிஞ்சு கள், அழிந்து சிதைந்துபோன நல்ல குடியி ருப்புகள் எல்லாவற்றுக்கும் யாரிடம் போய் 'நட்டத்தை ஈடு செய்யுங்கள்' என்று கை யேந்துவது?

கண்ணீர் கொண்ட முகங்களும் ஏந்திய கைகளுமாகத்தான் இந்த மூன்று வருடங் களாகத் தமிழர்கள் அலைந்து கொண்டி ருக்கின்றனர்.

இலங்கையில் இருந்தால் ஆமியால், யுத்தத் தால் கொல்லப்படுவோம் என்று வெளிநாடு களுக்கு ஓடிய தமிழர்களை 'இனிமேல் நாட் டுக்கு வராதீர்கள்' என்பதுதான் இரட்டைக் குடியுரிமை சட்டம் இல்லாமலாக்கப்பட்டதற்கும் வெளிநாட்டுக் தூதரகங்களில் இலங்கை பாஸ்போட்டை இனிமேல் அகதிகள் எடுக்க முடியாது என்ற சட்டத்திற்கும் பிரதான காரணம்.

இங்கு, இங்கிலாந்தில் இருந்து திருப்பி அனுப்பும் அகதிகளுக்கான தற்காலிக பாஸ் போட்டை எடுக்க தூதராலயத்தில் பெரும் கெடுபிடி கொடுக்கிறார்கள் என்று பலர் என் னிடம் சொல்லியிருக்கிறார்கள். ஏனெனில் தூதராலயங்களில் இருப்பவர்கள் ஆமிக் காரர்கள்.

இனிமேல் நீங்கள் வேறு நாங்கள் வேறு என்று ஆட்சியாளர்கள் சொல்கிறார்களா?

தமிழர் பகுதிகளில் புத்தர் சிலைகளும் அரச மரம் நடும் வேலைகளும் நடைபெறுவது சைவர்களை குறைத்து விட்டு பௌத்தர்க ளைப் பெருக்கும் வேலைத்திட்டம்தானே. அப்போது "புலிகள் தான் ஆயுதம் வைத் திருந்தார்கள். அதனால் தான் பிரச்சினை" என்ற மகிந்த அரசு மீண்டும் புலிகளை வைத்து அரசியல் செய்கிறது. அதுதான் சிக்கல்.

சம்பூரை விட்டு புலிகள் போன பிறகு நான் அங்கு பத்திரிகையாளர்களுடன் போனேன். அங்கே நாய்களையும் மாடுகளையும் தவிர வேறு ஒன்றையும் நான் காணவில்லை.

மாவிலாறு யுத்தம் ஆரம்பித்த கையோடு அடுத்து ராணுவத்திடம் விழுந்தது சம்பூர். புலிகள் திருகோணமலை துறைமுகத்தை

தொடர்தல் 79ம் பக்கம்

# மூன்றாம் முள்ளி...

78ம் பக்கத் தொடர்ச்சி...

இலக்கு வைத்து தாக்கியது சம்பூரில் இருந்து தான்.

புலிகள் இல்லாமல் போன பிறகும் சம்பூர் மக்களுக்கு அவர்களிடம் இருந்து பறிக்கப் பட்ட நிலம் கொடுக்கப்படவில்லை.

மூட்டை முடிச்சுகளுடன் போனவர்கள் இன்னும் அகதி முகாம்களில்தான் இருக்கின்றனர். கல்வீடு, வாகனங்கள், காணிபூமி எல்லா சொத்துக்களையும் இராணுவம், அரசாங்கம் எடுத்துக்கொண்டு விட்டது.

சம்பூரில் பத்தாயிரம் ஏக்கர் தமிழர் நிலங்கள் பறிக்கப்பட்டு விட்டன. முள்ளிக்குளம், கேப்பாபிலவு, திருமுறிகண்டி, முள்ளிவாய்க்கால், அம்பலவன்பொக்கணை என்று எம் மக்கள் வாழ்ந்த இடங்களை எல்லாம் இராணுவம் எடுத்து விட்டது மக்களை விரட்டி விட்டது.

முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு, அம்பலவன் பொக்கணை பிரதேசம் இருபது சதுர கிலோ மீட்டர் பரப்பு கொண்டது. இங்கு ஐயாயிரத்து முன்னூறு குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. இந்த குடும்பங்கள் இப்பொழுதும் அகதி முகாம்களில் இருக்கின்றனர் அல்லது நடுத்தெருவில் கைவிடப்பட்டிருக்கின்றனர்.

இந்த நிலைமைகள் தொடர்பாக இலங்கை அரசு அல்லது ஜனாதிபதி எந்தக் கரிசனையும் கொள்ளாத நிலையில் வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் இலங்கை தமிழர்களுக்கான உரிமை வேண்டிய போராட்டங்களை தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர்.

இலங்கையில் தமிழர்களுக்கான வாழ்வுரிமை என்பது எதிர்காலத்தில் இல்லாமல் போய் விடுமோ என்ற அச்சம் வெளிநாடுகளில் வாழுகின்ற தமிழர்களுக்கு இப்பொழுது வந்து விட்டது. சிலர் “அரசாங்கத்தோடு சேர்ந்து இயங்கினால் மாத்திரமே தமிழர்களுக்கு ஏதாவது கிடைக்கும்” என்று பகிரங்கமாகவே சொல்வதை நான் கேட்டிருக்கிறேன்.

‘கொழும்பு விமான நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்படுவோம்’ என்ற அச்சம் காரணமாக பல தமிழர்கள் எனக்கு தெரிய தங்களது இலங்கைப் பயணத்தைத் தவிர்த்து வருகிறார்கள். அரசாங்கத்துக்கு இணக்கமான தமிழர்கள் மட்டும் இலங்கைக்குப் போக முடியுமான நிலைமை காணப்படுவதாக இங்கே லண்டனில் காணுகின்ற தமிழர்கள் சொல்கிறார்கள். அரசியல் செயல்பாட்டாளர்களான சிங்களவர்களைக் கண்டே மகிந்த



பேரச்சம் கொள்கிறார்.

30 வருட அகிம்சை, பிறகு 30 வருட ஆயுத போராட்டத்தின் பின்பு தமிழர்கள் இழந்தவைதான் அதிகம்

உலகம் முழுவதிலும் வாழ்கின்ற தமிழர்கள் தமது பூர்வீக நிலங்களைக் காவுகொடுத்து விட்டு கையறு நிலையில் இருக்கின்றனர்.

அரசாங்கம் இப்பொழுது “150 பயிற்சி பெற்ற புலிகள் வந்து விட்டனர் மீண்டும் அவர்கள் திருகோணமலையில் புலிகளின் பயிற்சிகளை சீடியில் போட்டு பார்க்கின்றனர்” என்று கதை கட்டி பயங்கரவாத தடைச்சட்டத்தை பாதுகாத்து வைத்திருக்கின்றது. இனிமேல் புலிகளால் அங்கு எதையும் செய்ய முடியாது என்று சிங்களச் சின்னக்குழந்தைக்கும் தெரியும்.

2009ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி மகிந்த ராஜபக்ச தமிழர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில்

ஓர் அமைப்பு (புலிகள்) குறுகிய நோக்கங்களை அடைய உங்கள் (தமிழர்கள்) மீது அதிகமான கஷ்டங்களைத் (யுத்தம்) திணித்தன. புலிகளின் உபாயங்கள் தோல்வியுற ஆரம்பித்ததும் நீங்கள் இடத்துக்கிடம் (அகதிகளாக) அலைந்து திரியவேண்டிய தாயிற்று. உணவு மருந்து மறுக்கப்பட்டது. இருள் சூழ்ந்த காலம் மறைந்து நீங்கள் எதிர் நோக்கிய தற்காலிக கஷ்டங்களும் முடிவுக்கு வந்துள்ளன. உங்கள் குடும்பம், நண்பர்கள், புதியதொரு வாழ்க்கைக்கு மீண்டும் வந்துள்ளீர்கள். உங்களின் புதிய வாழ்க்கைக்கு இலங்கை அரசாங்கமே (மகிந்த) அதிகமாக செய்திருக்கிறது.

இனியும் போலி தூதுவர்களாலும் ரட்சகர்களாலும் பிழையாக நீங்கள் வழி நடத்தப் படுவதை அனுமதிக்க கூடாது. உங்கள் குடும்பத்தினருக்கு நல்லாசியுடன் வளமான எதிர்காலம் கிடைக்கவும் வெற்றிக்கனவுகள் நனவாகவும் நான் பிரார்த்திக்கிறேன்

இப்படிக்கு
மகிந்த ராஜபக்ச
என்றிருந்தது.

ஜனாதிபதி அவர்களே உங்கள் பிரார்த்தனை மூன்று வருடங்களாகியும் இன்னும் பலிக்கவில்லையே.

இனியும், இழப்பதற்கு எதுவுமே இல்லை தமிழர்க்கு.



Ilaya.abdillah@thaiveedu.com

# மெனிக் ஃபாம்...

77ம் பக்கத் தொடர்ச்சி...

குப் போதிய வருமானமில்லை. மிகவும் கஷ்டப்பட்டுத்தான் வாழ்வைத் தொடர்கிறோம்.



ஒரு நேரச் சாப்பாட்டுக்குக்கூட வழியில்லாதவர்களும் இருக்கிறார்கள் இங்கு. பெற்றோரை இழந்து தவிக்கும் பிள்ளைகளும் இருக்கிறார்கள். 2009க்கு முன்பிருந்த புதுக்குடிருப்பு மக்களில் 10% வரையிலானோரே மீளக் குடியேறியுள்ளனர். பலருக்கு என்ன நடந்ததென்றே தெரியவில்லை. பதுங்குகுழிகளுக்குள் ஷெல் விழுந்தே பல குடும்பங்கள் முற்றாகக் கொல்லப்பட்டுவிட்டன.

இப்படி அந்தக் குடும்பத்தின் தலைவன் சொல்லிக் கொண்டுபோக, “உங்கள் உறவினர்கள், நண்பர்களில் யாராவது உயிரிழந்துள்ளார்களா?” என்று கேட்டோம்.

கனத்த மௌனம்.

தொடர்ந்து அவர் சொன்னது...

புதுக்குடியிருப்பில் இருந்தபோது உணவுக்காக வரிசையில் நின்றவேளையில் என்னுடைய 13, 22 வயதான இரு பெறாமகள்மார் ஷெல் தாக்குதலில் அவ்விடத்திலேயே உயிரிழந்தார்கள். மதியம் 12 மணியளவில் இச்சம்பவம் நடந்தது. உறவினர்கள் கூடி இறுதி நிகழ்வுகளைக்கூட நடத்த முடியாது. அடிக்கப்படும் ஷெல்கள் இறுதி நிகழ்வுக்குக் கூடும் உறவினர்களைக் கூட விட்டுவைக்க மாட்டா என்று எல்லோருமே உணர்ந்திருந்தோம்.


மாலை நான்கு மணியளவில் அழுதுகொண்டிருந்த பெற்றோரையும் உறவினர்கள் எல்லோரையும் வலுக்கட்டாயமாக பதுங்குகுழிகளுக்குள் இருக்கச் செய்துவிட்டு மூன்று ஆண்கள் பெறாமகள்மாரின் உடலங்களை அடக்கம் செய்யப் புறப்பட்டோம். சம்பவம் நடந்த இடத்துக்கு மிக அருகிலேயே மழை பெய்து சகதியாக இருந்த நிலத்தில் முழங்கால் அளவு ஆழத்தில் அடக்கம் செய்தோம்.

எம்மிடம் வாய்விட்டு அழ உடலில் தெம்பிருக்கவில்லை;

கண்ணீர் விட்டு அழ கண்களில் நீரில்லை;

‘யாருக்கு என்ன பிழை செய்தோம்?’ என நொந்து நொந்து மனதுக்குள் அழுதோம்...

இன்னமும்
அழுதுகொண்டிருக்கிறோம்.



gangatharan.k@thaiveedu.com